DEUS MEUS ET OMNIA
CMSF

# பாதை
PAATHAI
FRANCISCAN MISSIONARY BROTHERS

ஆண்டவருக்காக வழியை
ஆயத்தமாக்குங்கள்,
அவருக்காகப் பாதையைச்
செம்மையாக்குங்கள்
(மத் 3:3)

பாதை 3 | மார்கழி - தை (நண்பர்களுக்கு மாத்திரம்) | பயணம் - 21

பொதுசன நூலகம்
15 FEB 2008

# நம்பிக்கையில் மலராட்டும் புத்தாண்டு



அன்பார்ந்த சகோதர சகோதரிகளே

ஒவ்வொரு வருடமும் நாம் குழந்தை யேசுவின் பிறப்பை மகிழ்ச்சியாக கொண்டாடுகிறோம். இவ்வருடமும் கிறிஸ்மஸ் விழாவை நாங்கள் கொண்டாடி கொண்டிருக்கிறோம். ஆனால் இவ்வருடம் மற்றைய வருடங்களை விட வித்தியாசமான ஓர் சூழலில் யேசுவின் பிறப்பு விழா அமைந்திருக்கின்றது.

எமது நாட்டில் யுத்தத்தால் எங்கும் ஒரே சோக மயமாகக் கிடக்கிறது. தந்தையை இழந்த பிள்ளைகள், கணவனை இழந்த மனைவி, பிள்ளையை இழந்து பெற்றோர், இளம் வயதினரை பலிகொடுத்த எம் நாடு, ஒரே சோகமயம். யுத்தம் வடக்கிலும், கிழக்கிலும் மட்டும் அல்லாது முழு இலங்கையிலும் நடைபெற்று வருகின்றது. இரு தரப்பினரும் தங்களை யுத்தத்திற்கு தயார் செய்து கொண்டே இருக்கிறார்கள். இப்படியான சூழலில் குழந்தை யேசு நம் மத்தியில் ஓர் சமாதானத்தை கொண்டு வருவது சாத்தியமாகுமா? இவ்யுத்த சூழலிலும் சமாதானத்தை விரும்பும் மக்கள் வாழ்ந்து கொண்டே உள்ளார்கள். அவர்கள் தங்களால் இயன்ற அளவு ஒற்றுமைக்காக, சமாதானத்திற்காக குரல் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள்.

நம் இலங்கையை இன்னும் ஓர் கோணத்தில் பார்த்தால் பொருட்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றது. மக்கள் அன்றாட வாழ்க்கையை வாழ்வதற்கு கஷ்டப்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள். இயற்கை அனர்த்தங்களினால் வெள்ளம், மண்சரிவு போன்றவற்றால் வாழ்க்கை கேள்விக்குறியாக இருக்கிறது. உலகை எடுத்துக் கொண்டாலும் வெள்ளம், சூறாவளி, யுத்தம், சுனாமி, வறுமை போன்றவற்றினால் மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள்.

இப்படியான ஓர் சூழலில் கிறிஸ்துவின் பிறப்பு நமக்கு என்ன ஒரு செய்தியை கொண்டு வருகிறது? அன்று இயேசு பிறந்தபோது "நல்மனதுள்ளவர்க்கு சமாதானம் உண்டாகுக கடவது" என சம்மனசுகள் இடையர்களுக்கு சொன்ன செய்தி இக்கால கட்டத்தில் மிகவும் பொருத்தமாய் உள்ளது. மனது நொந்து போய் உள்ள மக்களுக்கு, அமைதியற்ற உள்ளங்களுக்கு நிச்சயமாக சமாதானம் என்பது நிச்சயம் நம் மனம் தளர்ச்சியடையாமல் சமாதானத்துக்காக உழைக்க வேண்டும். இன்னும் சோர்ந்து போகாமல் தைரியத்தோடு இயேசு கொண்டு வந்த செய்தியை பரப்பும் கருவிகளாக நாம் மாறவேண்டும்.

இவ்வருடம் வெளி ஆடம்பரங்களுக்கு முதல் இடம் கொடுக்காமல் உள சமாதானத்திற்கும் எமது நாட்டின் சமாதானத்திற்குமாக இறையேசுவின் பால் எமது இதயங்களை உயர்த்துவோம்.

உங்கள் அனைவருக்கும் சமாதானம் நிறைந்த கிறிஸ்மஸ் நல் வாழ்த்துக்கள்.

அருட். சகோ. கிறிஸ்டி
பிரான்சிஸ்கன் சகோதரர் சபை முதல்வர்

## நத்தார், புத்தாண்டு பொங்கல் வாழ்த்துக்கள்




பொய்மை இல்லாத வாழ்த்துக்கள்
புறம் பேசாத செயல் வடிவங்கள்
துன்புறுவோருடனான அன்புறவுகள்
பகைமையை களையும் சந்திப்புகள்
பாசத்தை தூண்டும் வார்த்தைகள்
அமைதி சூழலை ஏற்படுத்தும்
அன்பு பகிர்வுகளால்
புதிய ஆண்டில் எடுக்கும் த ீர்மானம்
செயல் வடிவம் பெறும் போதுதான்
அமலன் பிறப்புக்கு
அர்த்தம் பிறக்கும்
நத்தார் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

பிரான்சிஸ்கன் சகோதரர்கள்

## மலரும் புத்தாண்டு என் மனதில் மலர வேண்டும்

மலரும் புத்தாண்டு என் மனதில் மலர வேண்டும்
புலரும் பொழுதில் நான் புன்னகை செய்ய வேண்டும்
ஓடும் போர் மேகம் கார்மேகமாக வேண்டும்
நாடும் அமைதிப் புறா எமை நாடியே வரவேண்டும்
வேட்டுச் சத்தம் மாறி இங்கு பாட்டுச்சத்தம் வேண்டும்
கேட்டுக் கிறுகிறுத்து மக்களும் இன்பத்தில் ஆடவேண்டும்
பள்ளிச் சிறுவர்கள் துள்ளி நடந்து வர
பாதையின் தடைகள் நீங்க வேண்டும்
வீதியால் போகும் மக்கள் - பத்திரமாய்
வீடு திரும்ப வேண்டும்
சாதி சமய இன மத பேதங்கள் சாக வேண்டும்
மோதும் தரப்புக்கள் இனி மோதல் தவிர்க்க வேண்டும்
போதும் இந்தப் போர் இனிய புத்தாண்டு மலர வேண்டும்
யாதும் எங்கள் ஊரே இனி யாவரும் கேளீர் தானே
ஏதும் குறை உண்டோ? வாரும் பேசித் தீர்க்கலாமே!

"நவாலியூர் நாயகி"

## பெத்திலகேமில் ஒரு விடிவெள்ளி

இறைவனாக இருந்தாலும் மாளிகையில்
பிறவாமல் மாட்டு தொழுவத்தில் மானிட
மகனாக பிறந்த என் அன்பு
இயேசுவே!

பாவிகளின் பாதையை நன்கு அறிந்து
பாவங்களுக்கு தகுந்த உவமையின்
உட்கருத்தை உலகிற்கு தந்த
இயேசுவே!

அன்னை மரியின் மடியில் தவழ்ந்து
அன்பை உலகத்தார்க்கு அளித்த
அன்பு
இயேசுவே!

ஞானிகளுக்கு ஒரு விடிவெள்ளியினால்
வழிகாட்டபட்டு உம்மை வணங்க
செய்த இயேசுவே!
உமக்கு நன்றி

ரொபட் ரொகான் மெத்திவ்
தரம் - 10
புனித பத்திரியாசிரியர்
அப்போஸ்தலிக்க நிறுவனம்
தலவாக்கலை

## அகரத்தில் பாலன்

அன்பான பாலகனே
ஆறுதலை தாருமையா!
இனிதான வாழ்வுதனை
ஈந்தெமக்கு அருளுமையா!
உலகுடன் வாழ்வதற்கு
ஊன்றுகோலாய் வாருமையா!
எம்மவர் ஏற்றம் பெற
ஏணியாய் உதவுமையா!
ஐயம் தீர்ந்து நாம்
ஒன்றாய் உம்மைபோற்ற
ஓர் குலமாய் வாழச் செய்யுமையா!
ஔடதமாய் எம்மை காத்து
அஃதே வாழச் செய்யுமையா!

அ. மவினோஷா
யாழ்ப்பாணம்

## எங்கே பிறந்திடுவார் எம் மீட்பர்?

மீண்டும் ஒரு நத்தார்
எம்மண்ணில் வருகின்றது
மகிழ்வோடு கொண்டாட
மனம் தான் இடம் தருமோ?
பிறப்பதற்கு இடம் தேடி
அலைகின்றார் எம் மீட்பர்
எம் மனக் கதவுகளை
திறந்து தான் விடுவோமோ?

போரும் வன்முறையும்
இல்லாது ஒழிந்து போய்
பகையின்றி அன்போடு
நாம் வாழ நினைத்திட்டால்
இடம் தேடி அலைகின்ற
எம் மீட்பர் இயேசு பிரான்
மரியோடு வந்தங்கே
மகழ்வோடு பிறந்திடுவார்

உயிரினை நாம் மதித்து
மாண்புதனை நாம் போற்றி
சகோதரராய் அரவணைத்து
சோகங்களை தாங்கி நின்றாய்
எம் உள்ளம் குடிலாக
நிச்சயமாய் மாறிவிடும்
யேசு வந்து பிறந்திங்கு
புன்முறுவல் பூத்திடுவார்

வருமானம் ஏதுமின்றி
வாடுகின்ற மக்களையும்
பசியுடனே படுத்துறங்கும்
ஏழைகளின் துயரினையும்
கருணையுடன் நாம நோக்கி
பகிர்ந்து வாழ நினைத்திட்டால்
அவ்வுள்ளம் குடிலாகும்
குழந்தை யேசு பிறந்திடுவார்

வெளிவேடம் தனை களைந்து
விசுவாச வாழ்வு வாழ்ந்து
இறைவார்த்தை தனைக் கேட்டு
அதன் ஒளியில் பயணித்தால்
எம்மிடையே இறையாட்சி
நிச்சயமாய் மலர்ந்துவிடும்
யேசு மீட்பர் பிறந்திடுவார்
இவ்வுலகை மீட்டிடுவார்

இ. அ. அமரரட்ணம்
புனித மரியாள் பேராலயம்
யாழ்ப்பாணம்

## மண்ணில் அவதரித்தார் பாலன்

துளிர்ந்திடும் தாமரை இதழினிலே
குளிர்ந்திடும் பனி துளியினிலே
கொஞ்சிடும் மழலை கீதங்களிலே
யேசுபாலன் மண்ணில் அவதரித்த காலம் அம்மா

மார்கழி மாத மயங்கும் குளிரினிலே
மல்லிகை மொட்டுக்கள் கண்விழித்திட
மனதை கொள்ளைக்கொண்ட மழலை குரலம்மா
மாமரி மடியில் மன்னன் வந்துதித்த காலம் அம்மா

மகிழ்ச்சியில் மனம் மகிழ்ந்திட
மன்னன் யேசு மண்ணிலே அவதரித்தார்
மாந்தர் மனங்களில் மகிழ்ச்சியின்
மங்கள கீதம் ஊற்றலாய் பெருகுதம்மா

தரம் 4 மாணவர்கள்
புனித தோமையார் பெண்கள் பாடசாலை
மாத்தளை.

## புத்தாண்டு எதிர்கொள்ள வா

இனிவரும் காலங்கள் எல்லாம்
எமக்காகவே உருவாகின என
கரைந்துபோன காலத்தை எண்ணி
கலங்கியது போதும் இனி எம் பாதம்
புதிய பாதையில் புதிய பயணமென
புத்தாண்டை எதிர்கொள்வோம் வா
நல் எண்ணம் பலமாக
நம்பிக்கையே மூலமாக
நல்லுறவால் நற்பணிகள் புரிய
நல்மனங்கள் இணைய வாழ்த்துக்கள்

கீ. நித்தியானந்தா
குருநகர்

## மாமன்னர் உதித்துவிட்டார்

மாட்டுத் தொழுவத்திலே
மாமன்னர் உதித்து விட்டார்.
மாநிலத்தின் பாவங்களை
மாட்சியுடன் நீக்கிடவே,

ஏழ்மையினை ஒழித்து விட்டு
ஏழைகளை வாழவிட்டு
யேசுபிரான் வந்துதித்தார்
எங்களுக்கு வாழ்வளிக்க

படிக்கவில்லை பாடங்களை
பாங்குடனே வாழ்ந்துவிட்டார்
ஏழைகளை வாழவைக்க
பாரினிலே வந்துதித்தார்.

V. இயூஜின்
கிளனனோர்

## மலரட்டும் 2008ஆம் ஆண்டு

புனித ஆண்டே வா
பூத்து குலுங்க வா
பழைய ஆண்டின் நன்மைகளை
பரமன் இயேசு நடத்தினதை
மறவேன் என்றும் உள்ளத்திலே
மலரும் ஆண்டில் துணை புரிவாய்
2007 ஆம் ஆண்டு களியட்டும்
2008 ஆம் மலரட்டும்
பயந்திட வேண்டாம் என் மனமே
பரமன் இயேசு முன் சென்று நடத்துவார்

J. M. பிலோமின
கிளனனோர்

## சமாதானத்துக்காக உழைப்போம்

உறவுகள் நட்புகளுடன் மட்டுமல்ல
உறவை தேடும் அன்புக்காய் அலையும்
துன்புறுவோருடனும், மனப்பாதையால்
பிரிந்து வழ்வோரிடம் சமாதானத்தை பகிருங்கள்
நாட்டின் சமாதானம் நம்மில் தொடங்கட்டும்

## மண்ணில் ஓர் ஒளி!

*விண்ணக ஒளியே மண்ணகம் ஒளிர்ந்திட*
*மாட்டுக் கொட்டிலில் பிறந்ததோ?*
*மண்ணகத்தை மீட்டிடலே எண்ணி மரி*
*மகனாக மானிட உருவெடுத்ததுவோ?*
*பாரினை மீட்டிப் பாவம் போக்கிடவே*
*தீமைகளை அகற்றிடப் பிறந்ததுவோ?*

ஜே. போல்ஜான்சன்
யாழ்ப்பாணம்

ஒவ்வொருவரும் சமாதானத்தின் தூதுவராக ஒவ்வொரு நாளும் பிற இன, மத உறவை புதியதாக்கி துன்புறும் மனிதரிடம் புது உறவால் அன்பை பகிர்ந்து புதிய ஆண்டில் உங்கள் முயற்சியால் சமாதான ஒளி பிறக்கட்டும்.

அமைதியின் தூதுவனாய் என்னைப் பயன்படுத்தும் - புனித அசிசியார்

# பாதையின் பார்வையில்

புதிய ஆண்டு மலர்ந்தது
புதிய சிந்தனைகள், தீர்மானங்கள்
புதிதாய் பிறப்பதில் அர்த்தங்கள் உண்டு
அவை செயல் வடிவம் பெற
தடைகள் தாண்டிப் பயணம் தொடர
பாதைகள் பலவாகலாம்
பயணத்தின் நோக்கம் ஒன்றாக
கிறிஸ்து பிறப்பின் செய்தி
எமக்கு ஓர் களியாட்டமா?
ஒளி விழாக்கள் மட்டும்தானா?
சரித்திரத்தில் இடமில்லை என்ற ஒலி
பெத்தலகேமில் மட்டும் ஒலிக்கவில்லை
இன்றும் பல பெத்தலகேம் குடிசைகள்
புதிதாய் தோன்றி
சத்திரங்களாகி விட்டனவே
அன்புள்ளத்தில் இடமின்றி
அந்தரிக்கும் ஒலிகள் கேட்கிறதே
மனுக்குலம் மகிழ மனுமகன் பிறந்த நாள்
2008 வரை நினைவு விழாக்களாக மலர
விழா எடுப்போம் மாற்றம் என்ன காண்போம்
வாழ்த்துக்கள், விருந்துகள், புத்தாடைகள்
புதிய உறவுகளாய் அன்பைப் பகிரும் வழிகளில்
அர்த்தமுள்ளனவா? சம்பிரதாய சந்திப்புக்களா?
ஆன்மீக சிந்தனைகள் வாழ்வாகியதா?
நின்று நிதானித்து ஒருகணம் சிந்திப்போம்,
நாட்டில் ஏற்பட்டுவரும் அசாதாரண சூழலில்
அமைதியின் தூதன் பிறப்பில்
நாம் இணைந்து கொள்ள
நாம் செயல்பட தீர்மானிப்போமா?
எல்லோரும் எதிர்பார்க்கும் அமைதி
வாழ்வுக்காய் போராடும் மனிதனின் தேடலில்
அர்த்தமூட்டும் செயல்கள் எவை?
இதற்கான சந்தர்ப்பங்கள் இன்று
இந்த விழாக்கள் மூலம்
எமது முரண்பாடுகள் தீர்க்கும்
பாதைகளாக்குவோமா?
பொய்மை இல்லாத வாழ்த்துக்கள்
புறம் பேசாத செயல் வடிவங்கள்
துன்புறுவோருடனான அன்புறவுகள்
பகைமையைக் களையும் சந்திப்புக்கள்
பாசத்தைத் தூண்டும் வார்த்தைகள்
அமைதி சூழலை ஏற்படுத்தும்
அன்புப் பகிர்வுகளால் மலரும்
புதிய ஆண்டில் எடுக்கும் தீர்மானம்
செயல் வடிவம் பெறும்போது தான்
அமலனின் பிறப்புக்கு அர்த்தம் பிறக்கும்
வார்த்தையும் வாழ்வும்

## புன்னகையால் புது உறவுகள் மலர வாழ்த்துவோம்.

புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்வாழ்த்துக்களாக கூறுவோம்'
பகைமையைக் களையும் அன்புறவாடல்
இனம், மதம், மொழி கடந்த பாதைப் பயணத்தில்
ஒவ்வொரு மலராக மலரட்டும்
புன்னகையுடனான உறவுகள்
புதிய ஆண்டில் மலரும் பூக்கள்
ஒவ்வொரு செயல்களாக பூக்கட்டும்
அமைதியற்ற ஜீவன்களாய்
அந்தரிப்போர் மனங்களில்
அன்பை பகிர அதிக தூரம் செல்லவேண்டாம்
உன்னுள் அமைதி தேடி உள்ளன்போடு
அருகில் இருப்பவருடனான
புரிந்துணர்வுள்ள நட்பு உறவை முதலில் வளர்க்காமல்
அகிலத்தில் அமைதிப் பூங்காவை
தேடி அலைவதில் அர்த்தமில்லை.
பகைமையை வளர்த்துக்கொண்டு
படைத்தவனைத் தேடிப் பயனில்லை
போரை முன் எடுப்பது சுலபம்
அமைதியை நிலைநாட்டுவது தான்
மிகமிக சவாலானது நாட்டிலும் வீட்டிலும்
முரண்பட்ட நிலையில் வாழ்ந்துகொண்டு
முழுமையான சமாதானத்தை அனுபவிக்க முடியாது.
ஆயுதத்தில் நம்பிக்கை வைப்போர்
ஆன்மீகத்தை இழந்தவரே
ஆண்டவனை வேண்டிக்கொண்டு
அயலவனை பகைப்பதில் அர்த்தமில்லை
துன்புறுவோரின் மத்தியில்
அமைதி நிலைபெற வேண்டும்
பகைவனிடத்தேதான் அன்பை பகிர வேண்டும்
பால யேசுவின் பிறப்பிலும்
பல சவால்கள்தான் இருந்தன
சந்தர்ப்பவாத சதித்திட்டம் இருந்தது
போராட்டமான வாழ்வின் மத்தியில்
புது வாழ்வு காட்டப் பிறந்து சாதித்தவரின்
பிறப்போடு நாம் இணைந்து மகிழ்ந்தால்
அதற்கான அமைதிப் பரிசை, அன்பும் பரிசாக
பகைமையை மறந்து அமைதியை பகிரலாம்.
பாலன் யேசுவின் பாதங்களில் நின்று
நிதானித்து தீர்மானம் எடுங்கள்
மலரும் புதிய ஆண்டில் எமது அமைதி
முயற்சிகளாக
எதனை முன் எடுப்போம்.
கொலை, கொள்ளை, காணாமல் போதல் மத்தியில்
துன்புறுவோரை தேற்றும் மனிதர்களாய்
பிறர் துயரை தன் துயராக உணரும்
உள்ளன தேடலில் எம்மை புடமிட்டு
அமைதிப் பூக்களை மாலையாக்க
ஒவ்வொரு கணமும் எமக்கு கிடைத்த சந்தர்ப்பமாக ஏற்று
எந்த சவால்களையும் எதிர்கொள்ளும்
கிறிஸ்துவின் பாதை வழியில்
பயணிக்கும் உண்மை சாட்சியாக
தீர்மானம் எடுப்போம்.
பிறர் மகிழ்வுக்காய் நாம்
சமாதானத்தின் கருவிகளாவோம்
ஒளி ஏற்றும் விழாக்களில்
நாமும் இருளகற்றும் ஒளியாக
இவ்வாண்டில் பிரகாசிப்போம்.
பால யேசுவின் பிறப்பின் வாழ்த்தை
அர்த்தமுடன் அயலவருடன் பகிர்ந்து
அமைதிப் பூக்களை மாலையாக்கி
புதிய ஆண்டுப் புதுப்பரிசாக
பாரினில் சமாதானம் மலர
கைகோர்த்து உழைப்போம்.
நத்தார், புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

ஆர்

## இலங்கை நிலைமை; பாப்பரசர் கவலை

இலங்கை முதல் சூடான் வரை உலகில் மோதல் நடை பெறும் பகுதிகளில் கேட்கும் ஆயுதங்களின் ஓசை குறித்துப் பரிசுத்தப்பாப்பரசர் பதினாறாம் பெனடிக்ட் ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளார். வத்திக்கான் கிறிஸ்மஸ் தினத்தன்று இடம் பெற்ற நள்ளிரவு ஆராதனையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

"சமாதானத்தின் தினமான இன்று எனது நினைவுகள் ஆயுதங்களின் ஒலி கேட்கும் பகுதிகளுடன் உள்ளன" என அவர் குறிப்பிட்டார்

இலங்கை சூடான் மலேசியா போன்ற நாடுகளின் நெருக்கடி நிலைமை துரதிஸ்டவசமாக தொடர்ச்சியாக மறுக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டார். மனிதாபிமான - நீதியான - நிரந்தரமான தீர்வுகளைக் காண்பதற்கான தெளிவு அரசியல் தலைவர்களுக்குக்கிடைக்கும் என அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

வறுமை, நீதியின்மை, யுத்தம் போன்றவற்றின் இருளில் வாழ்பவர்களைப் பாதுகாப்பான வாழ்க்கை காண அபிலாஷை மறுக்கப்பட்டவர்களைக்குறித்தும் அவர் குறிப்பிட்டுள்ளார்

"பாதை" வாசகர்களே! உங்கள் நண்பர்கள் உறவுகளுக்கும் பாதையை அறிமுகப் படுத்துங்கள். புதிய வருடத்துடன் தபால் செலவுகளும், காகிதங்கள் விலை அதிகரிப்பும் காரணமாக பாதையின் விலை 10/= ரூபாவாக விற்பனையாகும்.

இலவச பிரதிகளை தவிர்த்து பாதை வளர்ச்சியின் பங்காளராக தயாராகுங்கள். விநியோகர்களாக உங்கள் பகுதியில் செயற்படுங்கள்.

நண்பர்களுக்கும் உபகாரிகளுக்குமான "பாதை"

| Editor | Editor |
| --- | --- |
| Paathai | Paathai |
| Franciscan Brothers | Francisian Brothers |
| Canal Road, | No.116, Vihara Road, |
| Wattakaliya, | Matale, |
| Chilaw, | Sri Lanka. |
| Sri Lanka. | Tel: 066-2223032 |
| Tel: 032-2223635 | |

E-mail: paathaicmsf@yahoo.com

உங்கள் அன்பளிப்புகள் உதவிகள் பாதை பத்திரிகையின் வளர்ச்சிக்கு பயன்படுத்த உதவும்

தனிப்பிரதி: 10.00ரூபா
ஆண்டு சந்தா: 100.00 ரூபா
வெளிநாடு யூரோ: US $ 8
(தனிப்பிரதி)

## ஆயத்தமா....?

நீல வானம் தோன்றியது
குளிர் காற்று வீசுகின்றது
மரங்கள் புற்கள் எல்லாம்
ஓசானா பாடுகின்றது ஏனென்றால்
மானிட மகனை வரவேற்கின்றது

இயற்கையே இப்படி வரவேற்கையில் மனிதராகிய நாம், கருவம், பொறாமை இவைகளை மனதில் வைத்துதான் இன்று நாம் மானிட மகனை வரவேற்கின்றோம். "மண்ணால் படைக்கப்பட்ட நாம் மண்ணுக்கே திரும்புவோம்" என்பதை மறந்து நமது பணத்தாலும், குணத்தாலும், சுகத்தாலும் எத்தனையோ இதயங்களை கொன்று கொண்டு இருக்கின்றோம்.

கரை நோக்கி அலைகள் பாயும் போது நாம் பார்த்து ரசித்து அதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். ஆனால் அந்த அலைகள் நம்மை மகிழ்ச்சிப்படுத்திக் கொண்டு கரையை அரிக்கின்றது என்பதை மறந்தவர்களாக இருக்கின்றோம். இதே மாதிரியாகதான் நமது வாழ்க்கையும், செல்வம் நிறைந்து புகழின் உச்சியில் செல்கின்றோம். ஆனால் நமது வாழ்க்கை கொஞ்சம், கொஞ்சமாக அரிக்கப்படுகின்றது என்பதை மறந்தவர்களாக இருக்கின்றோம். ஏனென்றால் இவ்வுலக வாழ்க்கை நிலையான வாழ்க்கையல்ல என்பதை அனைவருக்கும் உணர்த்துவதற்குதான், கடவுளின் ஒரே மகன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஏழையாக, எளிமையாக மாட்டுக் கொட்டிலில் நம் மத்தியில் நமது அன்னை மரியாளின் பரிசுத்த உதிரத்தில் மனிதனாக தோன்றினார்.

அந்த நாள் மிகவும் அண்மையிலுள்ளது, அன்று ஆண்டவரின் வழியை ஆயத்தம் செய்ய திருமுழுக்கு யோவான் அனுப்பப்பட்டார். அவர் கூறியதாவது "ஆண்ட வருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள், அவருக்காக பாதையைச் செம்மையாக்குங்கள்." (மத் 3:36) அந்த பொறுப்பு நம் ஒவ்வொருவரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நாம் அந்த மானிட மகனின் வருகைக்காக வழியை ஆயத்தம் செய்வோம். எப்படியெனில் அனைவரிடமும் அன்பாய் இருப்போம், பகிர்ந்து வாழ்வோம். இப்படி நாம் வாழ்ந்தோமாயின் அந்த மானிட மகனின் பிறப்பு நம்மத்தியில் உண்மையான பிறப்பாகும்.

நம்மை சூழவுள்ள இயற்கையே மானிட மகனை எவ்வளவு அன்பாக அதன், அதனின் செயலில் அவரை வரவேற்கையில் நாம் எத்துணை உயர்ந்தவர்கள்! கடவுளின் சாயலில் படைக்கப்பட்டவர்கள்! நாம் அவரை எப்படியெல்லாம் அவரை வரவேற்கின்றோம் என்பதை அவர் வானத்தில் இருந்து பார்த்து கொண்டிருக்கிறார். சந்திப்போம் ஆண்டவரின் வழியை ஆயத்தப்படுத்த செயல்படுவோம்.

ச. தேவகுமார்
நவசன்னியாச இல்லம்
சிலாபம்

## இறைவனுள் நாம் அனைவரும் ஒன்றாகுவோம்

செபம் தியானம் இறை வணக்கமூடாக இறை உறவை வளர்ப்பது புனிதத்துவத்தை அடைவதற்கான அடித்தளமாகும். செபத்தின் ஊடாகவே நாம் அனைவரும் ஒன்றாக இறைவனுள் இணையமுடியும்.

இறைவாழ்வை கடலில் மிதக்கும் பனிக்கட்டிக்கு ஒப்பிடலாம். அதன் பெரும் பகுதி நீருக்குக் கீழ் உள்ளது. ஒரு சிறிய பகுதியே நீருக்கு மேல் காணப்படுகின்றது. அவ்வாறே இறைவனுள் இணைந்த வாழ்வு அன்று கிறிஸ்தவ பக்தர்களின் பெரும்பாலானோர் தூய்மையான வாழ்கை நடத்தினர். இவர்களது வாழ்க்கை இன்று எம்மை இறைவனுள் ஒன்றிணைக்கின்றது, ஊக்குவிக்கின்றது, முன்மாதிரியான வாழ்க்கை நடத்த உதவி புரிகின்றது.

இறைவனே எம்மை கிறிஸ்து ஊடாக ஒன்றிணைத்தார். கிறிஸ்து தன் தந்தையுடன் ஒன்றிணைந்து தன் பணியை செய்தார். செப வேளையில் நாம் அனைவரும் இறைவனுள் ஒன்றிணைகின்றோம். நாம் இறைவனுக்கு செவிமடுத்தால் நம்மால் இறைவனின் குரலைக் கேட்க முடியும்.

இயேசு நாதர் சிறிய வயது தொடக்கம் செபம் பண்ணுவதற்கு பழக்கப்பட்டிருந்தார். பல சந்தர்ப்பங்களில் தனிமையாக செபித்தார். இயேசு தனது சீடர்களுக்கு இறைவனோடு ஒன்றிணையவும், செபிப்பதற்கும் கற்றுக் கொடுத்தார். செபத்தினூடாக உறுதியையும் வழி நடத்தலையும் நாம் இறைவனிடமிருந்து பெறுகின்றோம்.

இவ்வாறு இறைவனோடு இணைந்து புனிதமான வாழ்க்கை வாழந்த மரியாள் இறைவனின் சித்தத்தை ஏற்ற மிகவும் தாழ்ச்சியுடன் மரண பரியந்தம் இறைவனுக்கு கீழ்ப்படிந்து வாழ்ந்தவள். அவ்வாறே புனிதர் பிரான்சிஸ் அசிசி இறை அன்பினால் நிறைவு பெற்று ஏழைகளுக்கு இறை அன்பை எடுத்துகாட்டிய புனிதராவார். புனிதர் தோமஸ் அக்குவினாஸ் தனது அறிவு வளர்ச்சியூடாக இறைவனை விளங்கிக் கொண்டு அதை விளக்கமாக வெளிப்படுத்தினார்.

இன்னுமாக இறைவனோடு இணைந்து பணி செய்தவர்கள் யோவான், வெஸ்லி வில்லியம், கேரி மார்டின், லூதர்கள், பணியாஸ், அன்னை திரேசா ஆகியோர் ஆவார். இவர்களது வாழ்வில் விசேட இலட்சியத்தை காணமுடிந்தது.

நாம் அனைவரும் இறைவனோடு இணைந்து வாழ்வதற்கு தியாகம், ஆன்மீகம் அவசியம். இன்னும் நாம் வாழும் குடும்பம், சமூகம், நாடு என்று ஒவ்வொன்றின் மீதும் இறை உறவை வளர்க்க முடியும். இவ்வாறு திருப்பலி ஊடாக புகழ்ச்சி, நன்றி, ஒப்புரவு, நடுவர் இறைவனுள் பணிபுரிய ஒன்றாக இறைவனுள் அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை உணர்ந்து செயற்படுவோம்.

R. கிருஷாந்தன்
இதல்கஷஸின்ன, அப்புத்தளை

## பாதையின் மடல்

### பாதையின் பயன்

"பாதை" இருப்பதால் எமக்கு இறைவன் பற்றிய விடையங்களையும் புனித அசீசியாரின் வாழ்க்கை வரலாறுகளையும் அறிகின்றோம். மற்றும் எமது திறமைகளையும் ஆற்றல்களையும் வளர்க்க எமக்கு "பாதை" உதவி செய்கிறது.

L. Devanayagam
Grade - 11

பாதை பத்திரிகை மூலம் நாங்கள் பல தகவல்களை பெற்று கொள்கின்றோம். எங்களுடைய ஆற்றல் வெளிப்படுகின்றது. உதாரணமாக நாம் இப்பத்திரிகையை வாசிப்பதன் மூலம் எமது வாசிப்புத்திறன் அதிகரிக்கின்றது.

F. Radrigo

- பாதை பத்திரிகையில் வரும் சிறுவர் பகுதி மிகவும் எடுத்துகாட்டாக அமைகின்றது.
- கல்வி பயில்பவர்களுக்கு ஒரு நல்ல வழிகாட்டியாக அமைகின்றது.
- பிரான்சிஸ்கன் சபையின் பின்னணியை அறிந்து கொள்ள கூடியவாறு அமைகின்றது.
- இப்பாதை பத்திரிகை மூலம் திருச்சபையின் இன்றைய நிலையை அறிந்து கொள்ள முடிகிறது அமைகின்றது.

அத்தோடு நிறுவன மாணவனான எனது வேண்டுகோள்

பாதை பத்திரிகையில் ஒவ்வொரு வெளியீட்டிலும் ஒவ்வொரு புனிதரின் சரித்திரம் மற்றும் பணி என்பவற்றை பதித்தால் எமது மாணவர்களின் மறையறிவும் வளரும்.

S. மைக்கல் ஜோசப்
தரம் - 11
புனித பத்திரிசியார்
கல்லூரி T. K.

"அன்பில் இறைவனை காணலாம் அதிகாரத்தால் அவரை அடைய முடியாது."

# உலக அமைதியை நிலைநாட்ட மக்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும்

போப் ஆண்டவர் வேண்டுதல்

கிறிஸ்மஸ் பண்டிகையையொட்டி போப் ஆண்டவர் பெனடிக்ட் நள்ளிரவு பிரார்த்தனை நடாத்தினார். இலட்சக்கணக்கானவர்கள் இதில் கலந்துகொண்டு போப் ஆண்டவரிடம் ஆசி பெற்றனர்.

கிறிஸ்மஸ் பண்டிகை உலகம் முழுவதும் உற்சாகத்துட்ன கொண்டாடப்படுகிறது கிறிஸ்மஸ் பண்டிகையையொட்டி கத்தோலிக்க கிறிஸ்தவ தலைமையிடமான வத்திக்கான் நகரில் உள்ள செயிண்ட்பீட்டர்ஸ் தேவாலயத்தில் சிறப்பு பிரார்த்தனை நடைபெற்றது.

போப் ஆண்டவர் 16ஆம் பெனடிக் சிறப்புப் பிரார்த்தனை நடாத்தினர் லட்சக்கணக்கானவர்கள் இதில் கலந்து கொண்டானர் அவர்களுக்கு போப் ஆண்டவர் ஆசி வழங்கினார். முன்னதாக அவர் மெழுகுவர்த்தி ஏந்தி உலக அமைதிக்காக சிறப்பு பிரார்த்தனை நடாத்தினார். வளாகத்தில் கூடி இருந்த லட்சக்கணக்கானவர்களை ஜன்னல் வழி யாக பார்த்து ஆசி வழங்கினார்.

கிறிஸ்மஸ் பண்டிகையையொட்டி போப் ஆண்டவர் தனது ஆசியரையில் கூறியதாவது உலக மக்கள் தாங்கள் வாழ்க்கையில் கடவுளை நினைப்பதிலும், ஏழை எளியவர்களுக்கு உதவி செய்வதிலும் நேரத்தை ஒதுக்கிக்கொள்ள வேண்டும்.

உலகில் அதிகரித்துவரும் சுற்றுச்சூழல் சீர் கேடு கவலை அளிப்பதாக உள்ளது சுற்றுச்சூழலை பாதுகாக்க உலகமக்கள் அனைவரும் முன் வரவேண்டும்.

உலக அமைதியை நிலைநாட்டவும் அதிக கவனம் செலுத்தல் வேண்டும். இவ்வாறு போப் ஆண்டவர் பெனடிக் உரைநிகழ்த்தினார் அவரது உரை உலகம் முழுவதும் 60 நாடுகளில் மொழி பெயர்க்கப்பட்டு தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது.

# கிறிஸ்தவ முஸ்லிம் சமாதானத்திலே உலக சமாதானம் தங்கியுள்ளது.

கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் சமாதானமாகாவிடில் உலகில் சமாதானம் நிலவ முடியாது. இவர்களுக்கிடையில் சமாதானத்தை உருவாக்குவது மிக முக்கியமானது என்ற கருத்து அண்மையில் வலியுறுத்தப் பட்டுள்ளது. உலகெங்கும் வாழும் 138 முஸ்லிம் தலைவர்கள் முதல் தடவையாக திருத்தந்தை 16ம் பெனடிக்ற் பாப்பரசருக்கு மடல் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர். கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லிம்களின் சமயங்களுக்கிடையிலான ஒருமைப்பாடு சமாதானத்தின் அடிப்படையே ஆகும் என்று எழுதப்பட்ட மேற்படி மடலானது பல கிறிஸ்தவ தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த இரு சமயங்களுக்கிடையில் பொதுவானவற்றை கண்டுபிடிப்பது சமயங்களுக்கிடையிலான உரையாடலுக்கு மட்டுமல்ல, கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் உலக சனத்தொகையில் 55 வீதத்திற்கு அதிகமானவர்களாக இருக்கிறார்கள். இந்த இரு சமயங்களுக்கிடையில் சமாதானத்தை ஏற்படுத்துவது உலக சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு ஒத்ததாகும். இந்த இரு சமயங்களும் சமாதானமாக இல்லாவிடில் உலக சமாதானம் நிலவ முடியாது என அம்மடலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மனித மாண்புகள் மலர உழையுங்கள்

அருட்பணி C. G. ஜெயக்குமார்

யாழ் கரிதாய் - கியூடெக் நத்தார் ஒளிவிழாவில் இயக்குனர் அருட்பணி C. G. ஜெயக்குமார் நத்தார் செய்தியில், கடவுள் மனிதனானார், மானிடத்தை வளர்க்க, கடவுள் மனிதனானார், மனிதன் மனிதனாக மனிதனை மதிப்பதில் கடவளின் சாயலில் வாழும் மனிதன், மனித மாண்பை மதிக்கும் போது கடவுளின் திட்டமும் நிறைவாய் கிட்டும் என்பதை பாலக உருவில் பிறந்தார், மனிதத்துக்கு மதிப்பளித்தார். எம் மண்ணில் ஆண்டுகள் இருபத்தைந்தை கடந்துவிட்ட போதிலும் மனித முரண்பாடுகள் மாற்றக் கூடியதாக தோன்றாத சூழலில் வாழும் நாம், முரண்பாடுகளை எப்படி கையாள்வது என்பதைப் பற்றி சிந்திப்போம். எல்லோரும் முரண்பாடுக்கான தீர்வைக் காண்பதில் அதிககாலம் செலவிட்டு தோல்வி கண்ட நிலையில் முரண்பாட்டை மாற்ற முடியாத சூழலில், முரண்பாட்டை கையாள்வது, எதிர்கொள்வது எப்படி? என்பதைப் பற்றி தற்போது பல ஆய்வாளர்கள் சிந்திக்க சொல்கிறார்கள். உண்மையில் அதற்கான காரணங்களும் பலவாகிறது.

மனித விழுமியங்கள் அருகி செல்வதற்கும், முரண்பட்ட சூழலே காரணமாகிறது. இடப்பெயர்வுகள் வறுமைநிலை, போர் அனர்த்தம், பல இழப்புக்கள் மத்தியில் ஏக்கம், பயம், நாளை என்ன? என்ற கலக்கமும் எழுந்த மன கலக்கத்திற்கான காரணங்களில் முக்கியமானது முரண்பாட்டை, எதிர்கொள்ள, கையாள முயலாமைமையே. இவற்றுக்கு மனித விழுமியங்கள் அருகிவருதலும், அறநெறி வாழ்வு சிதைவடைந்தலுமே காரணம் என யதார்த்தமாக காணக்கூடியதாக உள்ளது. இவை குடும்பத்திலும், சமூகத்திலும் குழும வாழ்விலும் ஏற்படுவதற்கு இன்றைய மனித விழுமிய மதிப்புக்கள் இழந்த நிலையில், மனிதத்தை இழந்த மனங்கள் மரத்துபோய் பொருளுக்கும், பொருளாதாரத்திற்கும் மதிப்பளிப்பதால் மனிதம் சிதைவடைவதை சகல மட்டத்திலும் காணமுடிகிறது.

மனித விழுமியங்கள் அழிதலும், அறநெறி வாழ்வு சிதைவுறுவதற்கும், குடும்பம், சமூகம், குழுமம், சூழலில் தமது பொறுப்பை, கடமையை அர்ப்பணத்துடன் செயற்படாமல் போனதால் ஏற்பட்ட விளைவுகளே காரணம். இதற்கு எமது சூழலில் ஏற்பட்ட மாற்றங்கள் முக்கியம் உலக மயமாதல், திறந்த பொருளாதார கொள்கையை மனிதனை விலையே வியாபார பொருளாக்கி, பணமோ, பொருளோ மனித மதப்பீடுகளால் பெரிதாக நினையாதால் ஏற்பட்டதன் விளைவுகளே இன்று மக்கள் அனுபவிக்கின்றனர்.

துன்புறும் மனிதனைக் கண்டும் காணாதவனாக வாழும்போது மனிதம் மரணித்துவிட்டது. மனிதன் ஜடமாக மாறும்போது ஏற்படும் விளைவுகளால் பல கொடூர செயல்களில் மனித உயிரை பறிக்கும், மனித மாண்பை மதியாத செயல்களிலும் ஈடுபட வைக்கின்றது.

மனிதனாக பிறந்த எவரும் தமக்கு கிடைத்த வாழும் சந்தர்ப்பங்களில் அர்ப்பணமான, தியாகமான, பிறருக்கு உதவும் செயல்களில் தம்மை ஈடுபடுத்துவதில் மனித மாண்பை, விழுமியங்களை காப்பதில் மனிதம் மலர ஆரம்பிக்கின்றது. வாழ்வில் உழைப்பதே முரண்பாடற்ற சூழலை ஏற்படுத்தும். காரணம்:

ஒவ்வொரு மனிதனும் இறைவனின் சாயல்களே
வறுமையில் வாழ்பவன் என் நண்பன்
வருத்தத்தில் இருப்பவன் என் நண்பன்

# பாதை காட்டும் மூன்று வகை மனிதர்கள்

★ மலையை வர்ணிப்பவர்கள் ஏறமாட்டார்கள் மாற்றம் தேவை என்று மற்றவர்களிடம் எதிர்பார்ப்பவர்கள் பரிசேயர், சதுசேயர் போல, அவர்களோ மாறமாட்டார்கள்

★ எல்லாவற்றையும் செய்வார்கள் ஆனால் எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்ய மாட்டார்கள். மேலோட்டமாக சிந்திக்க மாட்டார்கள். அறிவுபூர்வமாக பார்க்க முயற்சிப்பவர்கள் பின்னர் சோர்ந்து போய் விடுவார்கள். (மத் 10:17-22) பணக்கார வாலிபன் போன்று சட்டதிட்டங்களை அனுசரிப்பார்கள் குறையை ஏற்றுக்கொண்டு செயல்பட மாட்டார்கள்.

★ மலையில் சிகரத்துக்கு மட்டுமல்ல முயற்சி செய்து அடுத்த பகுதியையும் சென்று பார்த்து வருபவன் இறை சித்தத்தை நிறைவேற்றுபவர்கள். இலச்சியவாதிகள், குறிக்கோள் (Aim) கொண்டு வாழ்பவர்கள். அன்னை மரயிாள் போன்றவர்கள் (மத் 13/44, லூத் 6/22, லூக் 1/45, மத் 13/45-46), விலையுயர்ந்த முத்தை வாங்கிகொள்ள முயற்சிப்பது போல, முயற்சிப் போன் பலனை பெறுவோம் பேறுடையாலர்களாக வாழ முனைவோமா? இல்லையேல் "ஐயோ! உங்களுக்கு கேடு ஏனெனில் நீங்கள் எல்லாம் அனுபவித்து விட்டீர்கள் (லூக் 6/24) சிந்தித்து மனம்மாறி செயற்பட்டு நற்செயல் புரிவோம்.

அருட். சகோ. தொபியாஸ்

# மன்னனாம் மைந்தன் யேசு



மார்கழி மாதத்தில் மயங்கும் பனியில்
மல்லிகையின் மணம் பரவ
மன்னனாம் யேசு அன்னை மேரி மடியில்
ஆட்டு மந்தையிடையிலே வந்துதித்தார்

ஆட்டிடையர்கள் அதிசயம் கொண்டு
கண்விழித்தனரே
கன்னி மரி பாலன் பாதம் வணங்க
அதிசய வழி சென்றனரே!
வானவர் அனைவருமே பண்ணிசைத்திட
மன்னனாம் யேசு பூவுலகில் கண்ணயந்தாரே

விண்ணில் தோன்றிய அதிசய தாரகையை
மூவேந்தர் கண்டு கொண்டனரே!
தாரகைத் துணையுடன் மன்னனாம் யேசு
தூங்கும் அழகினை கண்கொள்ளா காட்சியை
கண்டு கொண்டனரே!

பாலர்கள் நாமும் சென்றிடுவோம்
பாவ உலகை மீட்கப் பிறந்துள்ள இறைவனின்
மகனைக் காண
வெள்ளை உள்ளம் படைத்தவர்களாய்
மன்னனாம் மைந்தனை காண வருகை வந்திடுவோம்.

P. டிலினி,
நிந்தனி,
புத்தளம்.

# வீதிகளின் மேற்ப்புப்பணி பற்றிய சாரதிகளுக்கு விதிகள் 10



வாகனம் ஓட்டுவோர் அதனோடு பணியாற்றுவோர் வாகன ஓட்டுனர்களுக்கான 10 கட்டளைகள்.

01. கொலை செய்யாதிருப்பாயாக
02. வீதி உனக்கும் மக்களுக்கும் இடையிலான ஆபத்தின் இடமாக அல்ல தொடர்பின் இடமாக இருக்கட்டும்.
03. எதிர்பார்க்காத நிகழ்வுகளை சமாளிக்க கவனமும் நிதானமும் துணைபுரியட்டும்.
04. அன்புடையவராகவும் அயலவர்களுக்கு குறிப்பாக விபத்தில் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு உதவுபவராகவும் நடந்து கொள்.
05. வாகனங்கள் அதிகாரம் மேலாதிக்கம் போன்ற பண்புகளை வெளிப்படுத்தும் பாவத்திற்கு சந்தர்ப்பம் அளிக்க வேண்டாம்.
06. வாகனம் ஓட முடியாத நிலையில் இருக்கும் போது ஓட வேண்டாமென இளையவர்களுக்கும் மற்றவர்களுக்கும் அன்பாக உணரப் பண்ணு.
07. விபத்தில் சிக்கியுள்ளவர்கள் உள்ள குடும்பங்களுக்கு உதவி செய்.
08. குற்ற வாகன ஓட்டுனர்களையும் தாக்கப்பட்டவர்களையும் உரிய நேரத்தில் ஒன்று சேர்த்து விடுதலை அளிக்கும் மன்னிப்பு அனுபவத்தை பெறச்செய்.
09. வீதியில் அதிக ஆபத்தை எதிர் நோக்குவோரை முதலில் .....
10. மற்றவர்கள் மட்டில் பொறுப்புடையவராக இரு.



# இயற்கையில் இறைவனை காண்போமா

பாலன் குடியில் அன்னை மடியில் பிறந்த பாலனாக நீங்கள் பிறந்தால் அந்த இயற்கை சூழலுடன் இணைந்து உங்கள் வளர்ச்சி பற்றியும் உள்ள எண்ணங்கள் பற்றியும் பாதைக்கு கதையா, கட்டுரையாக, கவிதையாக மலரட்டும்.

இயற்கை சூழலில் மரத்தோப்பில் கூடுகட்டிய குருவிக் கூட்டின் மத்தியில் புதிதாக ஓர் பிறப்பு உலகை தரிசிக்க முட்டையில் இருந்து வெளிவருகிறது. தாய்க் குருவியின் அணைப்புடன் உலக தரிசனம் இயற்கையின் அழகை இறைவனின் படைப்பாக காணும் காட்சியில் நீங்களே அந்த குருவிக் குஞ்சானால் எப்படி அந்த அனுப்வங்கள் இருக்கும் என்பதை பாதைக்கு எழுதுங்கள்.

# களி கூறும் பணிகள் சில .......

திருமலை மட்டுமாநகரின்
குருக்கள் மடம் தனை நாடி
வந்தனரே (1982.03.25) அன்று
தூய பிரான்சிஸ்குவின் சீடர்கள்

அமைத்தனர் ஓர் பணித்தளம்
பெயரிட்டனர் "அசீசி இல்லம்"
ஆற்றினர் பணிகளை கிராமங்களில்
ஊட்டி வளர்த்தனர் விசுவாசத்தை

ஆற்றிய பணிகளோ பல
ஆன்மீகப் பணி என்றும்
கல்விப் பணி என்றும் அதில்
சிறுவர் பராமரிப்பும்

ஆற்றினரே தொண்டுகள் பல
அலங்கரித்தனர் தடாகத்தில் தாமரையாய்
வீசினர் மாலைத் தென்றலாய்
பணி ஆற்றினர் அர்ப்பணித்தனர்

இன்றுவரை ஆற்றிய பணிகளோ பல
இயம்பியதோ அதில் சில
கடந்ததோ ஆண்டுகள் இன்று
ஆஹா... இருபத்தைந்து ஆண்டுகளாம்

கொண்டாடியது அந்நாளை
பண்பாடியது பொன் நாளாய்
வெள்ளிவிழாவாய் கலைநிகழ்வாய்
களி கூறியது குருக்கள் மடம்

பெசலிக்கா ரோசான் கெனத்

# மனிதம் மலர வேண்டும்

மண்ணில் மனித நேயம் வளர வேண்டும்
மனித மனதில் மாண்புகள் உயரவேண்டும்
மதம் என்ற மது மறைய வேண்டும்
மக்கள் என்ற மனம் கொள்ளல் வேண்டும்

சமுதாயம் வளரும் நல் எண்ணம் வேண்டும்
சமயம் என்ற சங்கங்கள் சாகவேண்டும்
சமம் என்ற கொள்கை கொள்ளல் வேண்டும்
சத்தியம் எம்மில் வளர வேண்டும்

மறை என்ற மடமை மறைய வேண்டும்
மாற்றான் மறையை மதித்தல் வேண்டும்
மண்ணில் மனிதன் மனிதனாய் வாழவேண்டும்
மற்றவர் மாண்பினை மதித்தல் வேண்டும்.

ஆக்கம்: Bro. J. யேசுதாசன்

# வரம் வேண்டும்

நீ வேண்டும் இறைவா
உன் வரம் வேண்டும் தலைவா,
உன்னைப் புகழ்ந்திட வரம் வேண்டும்,
உன்னைப் பாடி உன் குரல் வேண்டும்,
உன்னைக் காண வரம் வேண்டும்,
உன்னிடம் பேசிட வரம் வேண்டும்,
நன்மைகள் செய்திட உன் மனம் வேண்டும்,
உதவிகள் செய்திட உன் அருள் வேண்டும்,
உறவென்று சொல்ல நீ வேண்டும்,
தர்மம் செய்திட உன் கரம் வேண்டும்,
தன் நலம் கொண்டவர்களை மாற்றிட வேண்டும்,
சமாதானம் கிடைத்திட உன் வரம் வேண்டும்.

வி. டிலாஞ்சன்
பிரான்சிஸ்
சிறுவர் இல்லம்
மாத்தளை



# கிறிஸ்மஸ் வந்தாச்சி

கிறிஸ்மஸ் கிறிஸ்மஸ் வந்தாச்சி
நிவ்யர் நிவ்யர் வந்தாச்சி
பரிசுகள் கிடைக்கும், பச்சனம் கிடைக்கும்
மனதிற்கு கொண்டாட்டம் வந்தாச்சி //

மெரி மெரி கிறிஸ்மஸ் //
அங்கே பார்த்தால் நத்தால் பாப்பா
சிறுவர்களை மகிழ்விக்கிறார்
சென்று அதிலே அவரை மகிழ்விக்கின்றோம் //

புத்தாடை அணிந்து வருகவே நம்
பாலகனை வணங்க சென்றிடுவோம்
மாட்டு தொழுவத்தில் பிறந்த பாலகனை
பார்க்க மூன்று பேர் வருகிறதாகவே

பொன் துவம் வெள்ளை கோலம்
பரிசாக கொண்டுவந்து கொடுக்கின்றார்களே
நம் பாலகனை வணங்கி விட்டு
செல்கிறார்களே.

K. கிறிஸ்டிபன்
தரம் 6B
அஸ்கிரிய

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

## அனைத்து வன்செயல்களையும் நிறுத்துங்கள்

**கிறிஸ்மஸ் செய்தியில் யாழ் ஆயர்**

கைதுகளும் காணாமல் போதல்களும் கொலைகளும் மரண அச்சுறுத்தல்களும் போர் மேகங்களும் சூழ்ந்துள்ள நிலையில் 2007ஆம் ஆண்டிற்கான நத்தார் பண்டிகையை எதிர் கொண்டுள்ளோம்.

பயத்திலும் பதட்டத்திலும் அடுத்து என்ன நடக்குமோ என்ற ஏக்க உணர்விலும் பாதுகாப்பு தேடி எங்கு செல்வோம் என்ற அங்கலாய்ப்பிலும் நத்தார்ப் பண்டிகையை மகிழ்வுடன் கொண்டாடும் நிலை இம்முறை இல்லை. போர் செயற்பாடுகளை நீக்கி பேச்சுக்கள் மூலம் நீடித்த அமைதியை கொண்டு வருவதற்கான செயற்பாடுகள் அருகிவிட்டன. போருக்கான அறைகூவலே எப்பக்கம் திரும்பினாலும் கேட்கிறது. இந்த நிலையில் அமைதியின் அரசராக இனங்களை ஒன்றிணைக்கும் பாலமாக பிறந்த பாலக இயேசுவின் நத்தார் பண்டிகை செய்தியில் நாம் உரத்து வலியுத்த விரும்புவது அனைத்து வன்செயல்களையும் நிறுத்துங்கள், போர் ஆயுதங்களுக்கு ஓய்வு கொடுங்கள், இனங்களுக்கிடையில் இணக்கத்தையும் ஒற்றுமையையும் ஏற்படுத்தக் கூடிய தீர்வுத்திட்டங்களை உடன் முன்வையுங்கள். அமைதிக்கான பேச்சுக்களை உடன் ஆரம்பியுங்கள் என்பதாகும்.

இதுவே இன்றைய நிலையில் துன்பத்திலும் வேதனையிலும் வாடும் தமிழ் மக்கள் பேரால் விடுக்கப்படும் வேண்டுகோளாகும். இம்முறை நத்தார்ப் பண்டிகையோடு ஒட்டிய கேளிக்கைகள், கொண்டாட்டங்கள், வெளி ஆடம்பரங்கள் என்பவற்றை அறவே தவிர்த்து நத்தார்ப் பண்டிகையை வெளி ஆடம்பரங்களற்ற அர்த்தமுள்ள ஆன்மீக விழாவாகக் கொண்டாடுங்கள். பிறரன்புச் செயல்களையும், அன்பின் பகிர்தல்களையும், இரக்கச் செயல்களையும், பொதுநல பணிகளையும் செய்து பாலக இயேசுவின் ஆசிகளை நிறைவாகப் பெற்று புதிய ஆண்டை வரவேற்க தயாராகுங்கள்.



## கிறிஸ்துமஸ் குடில்கள்

1223 ஆம் ஆண்டில் புனித அசிசி பிரான்சிஸ் முதன் முதலில் கிறிஸ்துமஸ் குடிலை அமைத்தார். எனினும் கி.பி.352ஆம் ஆண்டு முதலே உரோமையிலுள்ள மரியன்னை பசிலிக்காவில் 'டெட்டோய்' எனப்படும் பொம்மை வடிவ சிலைகளை வைத்து கிறிஸ்துமஸ் நாளில் மரியன்னையையும் பாலன் இயேசுவையும், பாலன் இயேசு மூன்று அரசர்கள் எனவும் காட்சிகள் அமைத்ததாக வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன. உலகின் மிகத் தொன்மையான குடில் திருத்தந்தை 4ம் ஓனோரியோவின் வேண்டுகோளின் பேரில் 1283ல் அர்னோல்போ காம்பியோ என்பவரால் அமைக்கப்பட்டது.

## கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டை வரலாறு

1843ல் இலண்டன் மாநகரில் கையால் எழுதப்பட்ட வாழ்த்து அட்டைகள் பரிமாறப்பட்டன. இலண்டனைச் சேர்ந்த ஜான் கால்கோட் கர்சி என்பவரே முதன் முதலாக வாழ்த்து அட்டையை வடிவமைத்தவர். இங்கிலாந்தைச் சேர்ந்த ஜான் கோர்டன் என்ற அம்மையார் 2001ஆம் ஆண்டு 10,677 வாழ்த்து அட்டைகளைத் தம் இல்லத்தில் தொங்கவிட்டு கிறிஸ்துமஸ் கொண்டாடினார். 2001 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 28 ஆயிரம் டாலர் மதிப்புடைய வாழ்த்து அட்டை பரிமாறப்பட்டது. இது உலக சாதனையாகக் கருதப்படுகிறது.



## கிறிஸ்து பிறப்பு பேராலயம்

பெத்லகேமின் பழமை மிகுந்த ஆலயமாகத் திகழ்வது கிறிஸ்து பிறப்பு பேரலாயமாகும். சுண்ணாம்பு கற்பாறையில் குடைந்தெடுக்கப்பட்ட குகையொன்றில் தான் யேசு பிறந்தார். இன்றும் அது போன்ற பல குகைகளை பெத்லகேமில் காணலாம். ஆதிக் கிறிஸ்தவர்கள் யேசு பிறந்த அக் குகையை புனித இடமாகப் போற்றி வருகின்றனர். கி.பி. 135ல் உரோமப் பேரரசன் அதிரியான் புனித நாட்டின் புனிதத் தலங்களை அழித்தொழிக்கும் முயற்சியிலே ஈடுபட்டு போது எருசலேமிலும், பெத்லகேமிலும் இருந்த புனித தலங்களை தரை மட்டமாக்கி அந்நிய தெய்வங்களுக்குச் சிலை வைத்தான். யேசு பிறந்த குகை மேல் அந்நிய தெய்வத்துக்கென ஆலயம் ஒன்று கட்டுவித்தான். அவன் செய்த செயல் தெய்வாதினமாக நன்மையில் முடிந்தது.

கி.பி. 318ல் உரோமைப் பேரரசன் கொன்ஸ்தாந்தின் கிறிஸ்தவனாக மாறிய பின் கிறிஸ்தவ சமயத்தை உரோமை சாம்ராச்சியத்தின் அதிகார பூர்வமான மதமாகப் பிரகடனப் படுத்தினான். அவனது தாயாகிய எலேனம்மாள் கி.பி. 325ல் புனித நாட்டுக்கு வந்து புனிதத் தலங்களை புனரமைத்தபோது மூன்று பேரலயங்களைக் கட்டுவித்தான் என வரலாறு சான்று பகிர்கின்றது. முதலாவது பேராலயம் எருசலேமில் கல்வாரி, யேசுவின் கல்லறை இரண்டையும் தன்னகத்தே உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டது. இரண்டாவது பேராலயம் யேசு பிறந்த குகைக்கு மேல் நிர்மாணிக்கப்பட்டது. மூன்றாவது யேசு மரணவேதனை அனுபவித்த ஒலிவத்தோப்பில் (கெத்சமனித் தோட்டத்தில்) கட்டப்பட்டது.

பெத்லகேமில் யேசு பிறந்த இடத்தைக் கண்டு பிடிப்பது சுலப மாக இருந்தது. ஏனெனில் அதிரி யான் அந்நிய தெய்வத்துக்கு கட்டிய ஆலயத்தை இடித்தபோது அதன் கீழ் அக்குகை காணப்பட்டது. இவ் விதமாக எவ்வாலயம் யேசுவின் பிறப்பின் நினைவை மறைக்க கட்டப்பட்டதோ அவ்வாலயமே யேசுவின் பிறப்பிடத்தைத் தகுந்த ஆதாரங்களோடு காட்டிக் கொடுக்கக் கூடியதாக அமைந்து விட்டது. தீமையிலும் நன்மை விளைந்ததற்கு சான்றாக உள்ளது.

கொன்ஸ்தாந்தின் தாய் எலேனம்மாளின் மேற்பார்வையில் கட்டப்பட்ட அப்பேராலயம் வரலாற்றில் இடம்பெற்ற பல அழிவுகளுக்கும் இடர்பாடுகளுக்கும் உட்பட்டு மீண்டும் மீண்டும் புனரமைக்கப்பட்டு யேசுவின் பிறப்புக்குச் சான்று பகர்ந்து கொண்டிருந்தது. பேராலயத்தின் முகப்பு மத்திய காலத்து அரண்மனை போன்று தோற்றமளிக்கின்றது. 170 அடி நீளமும் 80 அடி அகலமும் கொண்டு சிலுவை வடிவில் அமைக்கப்பட்டுள்ளது.

பேராலயத்தின் கீழே தான் யேசு பிறந்த குகை உள்ளது. அவ்விடத்திற்குச் செல்வதற்கு இரண்டு பாதைகள் உண்டு. படிகள் வழியாக கீழே இறங்கிச் செல்ல வேண்டும். முக்கோண வடிவில் அமைந்திருக்கும். அவ்விடத்தின் பரப்பு 350 அடிகளாகும். யேசு பிறந்த இடத்தை குறிப்பிடும் இடத்தில் பெரியதொரு வெள்ளி விண்மீன் நிலத்தில் பதிக்கப்பட்டுள்ளது. மத்தேயு நற்செய்தியில் கூறப்பட்டுள்ளது போன்று "அவரது விண்மீன் எழுதலைக்கண்டு அவரை வணங்க மூன்று ஞானிகள் வந்தார்கள். அந்த விண்மீன் குழந்தை இருந்த இடத்திற்கு மேல் வந்து நிற்கும் வரை அவர்களுக்கு முன்னே சென்று கொண்டிருந்தது" (மத்தேயு 2:2 - 9) என்பதற்கமைய விண்மீனுக்கும் அவரது பிறப்பிற்கும் தொடர்பை காட்டவிரும்பிய அவர்கள் அவர் பிறந்த இடத்திலேயே ஓர் அழகிய விண்மீனைப் பதித்துள்ளார்கள் போலும். அந்த விண்மீனுக்கு மேல் இலத்தின் மொழியில் "இந்த இடத்தில்தான் கிறிஸ்து பிறந்தார்" என எழுதப்பட்டுள்ளது.






ஆக்கம்:
S. Darvin
Matale
உதவி (புனித நாட்டு பயணம்)

## மார்கழி குளிர்தனிலே மனுவுரு எடுத்த மீட்பர்

மார்கழி மாதக் குளிர்தனிலே
மாமரி மடிதனிலே
காரிருள் வேளையிலே ~ கடும் குளிர்தனிலே
மனுவுரு எடுத்தவரே
ஆயனை அரவணைக்க பஞ்சனையில்லை
மந்தைகளின் உறைவிடமே
மாதவனின் பிறப்பிடம்

பாரினிலே ஒரு பாலகனாய்
வந்துதித்தீர் ~ இரட்சகரே
அன்பின் ஊற்றாய் உருவெடுத்தீரே
ஆருயிராய் அர்ப்பணமானீர்
மகிமையின் வடிவமாய் வடிவெடுத்து
ஏழையின் செல்வமாய் வந்துதித்தீர்




பாலகன் இயேசு மனு உருவெடுத்து பாரினிலே
வந்துதித்தார் ~ நேசரே
மந்தையை பிரிந்த ஆடுகளைப்போல்
மங்கிய வாழ்வு வாழ்ந்த ~ பாவிகளாகிய
எமக்கு ஒளியாய் ~ பரமன் இயேசு
எமக்காக இவ்வுலகில் வந்திதித்தீர்

பாவ இருள் சூழ்ந்த உலகினிலே
பரிசுத்த கன்னியின் உதிரத்திலே
அவதரித்தாய் ~ தூயவனே

பாவ இருள் சூழந்த உலகினிலே
உத்தமனாய் பிறந்தீரே ~ மைந்தனே
உண்மை வழியை உலகிற்கு காட்ட
வந்தீரே ~ இராஜனே
சிதறிய உள்ளங்களை ஒன்றாய்
சேர்க்க பிறந்தீரே
அக இருள் அகற்றி இறை அருள் பரப்ப
வந்தாய் ~ அருள்வேந்தனே.

வல்லமை கொண்ட தோழனாம்
இறை மைந்தனாய் ~ தேவனே நீர்
எம்மிடையே மனுவுரு எடுத்தீரே.

தரம் 10 மாணவர்கள்
புனித தோமையார் பெண்கள் பாடசாலை
மாத்தளை.

## ஆசை

குளிர் வலய நாடான கிறீன்லாந்து நாட்டின் ஓர் கோடை காலத்தில் எவ்வேளையும் குளிரால் வாடும் மக்கள் மகிழ்ந்தவராய் கடற்கரையில் சூரியக் குளியலில் ஈடுபட்டிருந்தனர். அங்கு ஒரு மனிதர் கரையில் அமர்ந்து சூரிய குளியலுக்குத் தன்னைத் தயார்படுத்திக் கொண்டிருந்தார். அவர் கடலில் ஓர் வெண்ணிறமான அழகிய கம்பளம் போன்ற ஓர் பொருள் மிதப்பதைக் கண்டார். அதைத் தனதாக்கிக் கொள்ள கடலில் பாய்ந்து நீந்திச் சென்று அதைப்பற்றினார். அதைப் பிடித்தவர் ஐயோ என அவலக்குரல் எழுப்பினார். அவர் பற்றிய பொருள் அழகிய கம்பளமல்ல ஒரு துருவப் பனிக்கரடி அது அவரை இறுகப்பிடித்துவிட்டது அவரின் ஓலத்தைக் கரையில் இருந்து கேட்டவர்கள் அதை விட்டு உடன் கரை நோக்கி நீந்தி வரும்படி சத்தமிட்டு அழைத்தனர். அதற்கு அவர் நான் அதை விட்டுவிட்டேன். ஆனால் அது என்னை இறுகப் பற்றிப் பிடித்துவிட்டது எனப் பரிதாபமாகப் பதிலளித்தார். ஒருமுறை பாவத்தை நாம் பிடித்தால் அது எம்மைத் தொடர்ந்து பிடிக்கும் மனித முயற்சிகளால் அதனின்று விடுபடிமுடியாது. இன்றும் பாவத்தின் பிடியில் வாழ்பவர்களைப் பாவம் இறுகப் பற்றிவிடுகின்றது. அதை விட்டு விலக முடியாத மரணப் பொறியாக அது அமைந்துள்ளது. இப்பாவப் பொறியின் பிடியில் இருந்து மானிடரை மீட்க விடுதலை அளிக்கவென இறைவன் மனிதனாக வந்தார். உலகில் வாழ்ந்து தனிப் பாவங்கள் சமுதாயத்தின் கூட்டுப் பாவங்கள் அனைத்திற்காகவும் தன் வாழ்வையும், உயிரையும் ஈந்து மனித சமுதாயத்திற்கு விடுதலை ஈந்தார். தான் தனது சாயலாகப் படைத்த மனிதரைத் தன்னிடமிருந்து பிரித்து அழிவுக்கு நேராகப் பாதாளத்தில் தள்ளிப் பாவக் கொடுக்கிற்கு தமது வீரச்சாவால் சாவு மணி அடித்தார்.

அவர் முதல் பிறப்பு ஏழ்மையாக, எளிமையாக, தாழ்வாக, அன்புருவாக, அமைதியான இரவில் கந்தைத் துணிகளால் சூழப்பட்ட மாட்டுக்குடிலில், தீவனத் தொட்டிலில் குழந்தையாக மலர்ந்தது. ஆனால் அவர் மீண்டும் வரும்போது அரசனாக இறை அதிகாரத்தைத் தோளில் சுமந்தவராய் நாம் எதிர்பாரா வேளையில் வாழ்வுக் கணக்கைக் கேட்டு நியாயம் செய்ய வர இருக்கிறார். நாம் பாவத்தின் சாபப் பிடியினின்று முதலில் விடுபடுவது மட்டுமல்ல அவரின் இறை அரசு மலரப் பாடுபட அழைப்புப் பெறுகிறோம்.

எம்மைச்சூழ துன்பங்கள், பயங்கள், அதிகார அடக்குமுறைகள், கடத்தல்கள், காணாமற் போதல்கள், மரணங்கள், துரைத்தனங்கள் அட்டகாசச் சிரிப்புச் சிரித்து வலம் வந்து பயமுறுத்தினாலும் நாம் அவரில் கொள்ளும் தன்நம்பிக்கையால் இவற்றின் பயத்தினின்று விடுதலையடைய முடியும். அவர் எம்மை மனந்திரும்பும்படி அழைக்கிறார். நாம் மனம் திருந்தி பாவங்களை உணர்ந்து வருந்தி அவரிடமாகச் சேரும்போது அவர் இம்மானுவேலாக எமது வாழ்க்கைத் துன்பச் சூழல்களில் எம்மோடு இருந்து அவற்றை எதிர்கொள்ள தன்நம்பிக்கையும் சக்தியும் தருகிறார். அன்று பயந்த மேய்ப்பருக்கு அஞ்சாதீர்கள் இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன். இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். குழந்தையைத் துணிகளில் சுற்றித் தீவனத் தொட்டிலில் கிடத்தியிருப்பதைக் காண்பீர்கள். இதுவே உங்களுக்கு அடையாளம் என்றார். (லுக்கா 2:10-11)

கடவுளைக் குழந்தையாக இந்நாட்களில் உங்கள் உள்ளக் கமலங்களில் தவழ இடங்கொடுங்கள். பாவப் பொறியினின்று விடுபட்டு பரம அரசின் பங்காளியாகி பாருலகு விடுதலை அடைய நற்பண்பு, அமைதி, மகிழ்வு உண்டாகப் பாடுபட்டு உழையுங்கள். இறையருளில் இணையுங்கள். என்றும் இன்புற்றிருக்க வேண்டும் என்றால் இதை மறந்து போகாதீர்கள் இறைவனின் அன்பும், அருளும் உங்களது ஆகட்டும். விண்ணவர் வருகிறார் விடியலைத் தருகிறார்.

இறையரசின் விடியலிற்காய்
என்றும் அன்புடன்,
ஈனொக். பூ. புனிதராஜா

## கல்லான இதயம்

இறைவனுடைய அன்புத் திட்டங்களுக்கு இசைவாக இல்வுலகில் எதுவும் தானாகவே அசைவதில்லை. அதற்கு எதிர், மாறாகவே இதயங்கள் இசைய துடிக்கின்றன. தன்னலம் எனும் சக்கரம் தானாகவே சூழல ஆரம்பிக்கின்ற இக்காலக்கட்டத்தில் நீதி எங்கே? நியாயம் எங்கே? அன்பு எங்கே? சமாதானம் எங்கே? துளிர்விட முடியும். எனது நலமே தன்னலம்தான் என வாழும் மனிதர்கள் இம் பூமியில் ஏராளம், ஏராளம், ஆகவே இக்கல் நெஞ்சங்கள் கரையும் வரை நாம் விழித்திருந்து செபிப்போம். பிறரன்பைக் காக்க தன்னன்பை மறந்த இயேசுவின் போதனையும் சாதனையும் விடிவெள்ளியால் நம்மை ஒளிரச்செய்வாராக.

சகோ. கிறேசின்
எல்பிட்டிய



# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

## இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை செய்தி

சமாதானத்தின் மன்னராகிய இயேசுவின் பிறப்பு விழா வாழ்த்துக்களை அனைவருக்கும் தெரிவிக்கின்றோம்.

நாம் தேடும் சமாதானம் எம்முடன் தங்கும் என்னும் எதிர்பார்ப்புடன் மீண்டும் ஒருமுறை கிறிஸ்து பிறப்பு விழாவை கொண்டாடுகின்றோம். இன்று இலங்கை மக்களின் சோதனை, வேதனை, நிம்மதியற்ற நிலைகளுக்கு மத்தியில் சமாதானத்தை அக்கறையுடன் தேடுவதே மிகப் பிரதானமாக உள்ளது. ஆயினும் எமது நாட்டில் அமைதி இன்னும் தூரத்து கனவாகவே உள்ளது என்பது உண்மையாகின்றது. வானதூதர் கிறிஸ்து பிறப்பில் வாழ்த்துரைத்தது போல் உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமை உண்டாகுக. உலகிலே அவர் தயவு பெற்றவர்களுக்கு அமைதி உரித்தாகுக நாம் கேட்கவே முடிகிறது. இன்று நாம் அனைவரும் சமாதானத்துக்குரிய தேவையை ஒரே குரலாக எழுப்பும் போது இராணுவத் தந்துரோபாயங்களே தனியாக சமாதானத்தைப் பெறுவதற்கு பயன்படுத்தப்படுவது போல் தென்படுகின்றன.

எண்ணற்ற வன்செயல்களும் கொலைகளும் வயது வேறுபாடின்றி சிறுவர்கள் மீதும் குரூர செயல்கள் புரிதலும் நாளாந்த நிகழ்ச்சிகளைாகி விட்டன. இன்று இந்த அழகிய தீவில் கொலை வன்செயல் பிரதிக் கலாசாரம் ஒன்று உருவாகி வருகின்றது போல் தெரிகின்றது. எவ்வகையான வேற்றுக்கருத்துக்கள் காணப்படினும் இன்று நாட்டில் நிலவும் சூழ்நிலை ஒன்றை மட்டும் தெளிவாக உணர்த்துகின்றது. அரசியல் தீர்வொன்றை கண்டுபிடித்து சமாதானத்தை அடைய அதனை பயன்படுத்த வேண்டும் என்பதே அச்சூழ்நிலை ஆகும்.

மனித மாண்பும் சம உரிமைகளும் நிச்சயமாக்கப்படாதவரை சமய, இன, மொழி ரீதியில் பாரபட்சங்கள் காட்டப்படுகின்ற வரை எமது நாட்டில் ஒற்றுமை, சாந்தி, சமாதானம் போன்றவற்றை எட்டவே முடியாது. இரண்டாவது வத்திக்கான் சங்கத்தில் கூறப்பட்டது போல், சமாதானம் அடையப்பட ஆக்ரோஷமான சண்டைக்குரிய காரணங்கள் முதலில் களையப்பட வேண்டும்.

கடந்த நான்கு சதாப்தங்களுக்கு மேலாக எமது நாட்டு அரசியல் தலைவர்கள் நாடு எதிர்கொள்ளும் பிரச்சினைகளை வெளிக்கொண்டு வர பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டனர். ஆயினும் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு ஒரு அரசியல் தீர்வைக் கண்டுபிடிக்க நேர்மையான உண்மையான முயற்சிகள் எதுவும் எடுக்கப்படவில்லை. என்பது கவலைக்குரிய விடையமாகும். எனவே சமாதானத்தின் மன்னரின் பிறப்பு விழாவைக் கொண்டாடும் இவ்வேளை கடவுளின் பெயராலும் எமது மக்களின் சார்பாகவும் அரசியல் தலைவர்களாகிய உங்களிடம் வேண்டுவது சுய நலன்களைத் துறந்து சமாதானத்தை பெற உழைக்க வேண்டும்.

எமது நாட்டை தவிர்க்க முடியாத அழிவிலிருந்து பாது காத்து ஒன்றிணைக்க ஊக்கமுடனும் விடாமுயற்சியுடனும் நம்பிக்கையுடனும் செயற்பட வேண்டும் என்பதேயாகும். எமது எதிர்கால சந்ததியினருக்கு வன்செயலும் கொலைகளும் நிறைந்த கலாசாரத்தையும் ஒற்றுமையின்மையையும் விட்டுச் செல்வது மிகவும் பாரதூரமான அநீதி என உணருகின்றோம். ஏனைய எல்லாவற்றையும் விட எமது நாட்டின் மீதும் மக்களின் மீதும் உறுதியான நம்பிக்கை வைத்தால் இன்னும் சமாதானத்தை பெற்றுக்கொள்ள வழிகள் பல உள்ளன என நம்பலாம். 25 வருடங்களாக நாம் வற்புறுத்தி மீண்டும் மீண்டும் கூறுவதையே ஆயுதச் சண்டையால் மட்டும் அமைதியை எமது பிரச்சினைக்கு தீர்வாகப் பெற்றுக் கொள்ளமுடியாது என்பதை மீண்டும் வலியுறுத்த விளைகின்றோம்.

பேச்சுவார்த்தையின் மூலம் மட்டுமே அனைத்து துறைகளிலும் அனைத்து மக்களுடைய எதிர்பார்ப்புக்களையும் பூர்த்தியாக்க கூடிய தீர்வை பெற்றுக்கொள்ள முடியும். இதுவே இன்றைய காலத்தின் கட்டாய தேவையுமாகும். நாம் தொடர்ந்தும் இன, மத, மொழி ரீதியில் பாரபட்சங்களை மேற்கொள்ள முடியாது. நாம் அனைவரும் இலங்கையர்கள் என உணரத் தொடங்கி இன, மத, மொழி சார்பில் உள்ள வேற்றுமைகளை களைத்து கொண்டு நாம் ஒவ்வொருவரும் இலங்கைக் குடும்பத்தின் சகோதர சகோதரிகள் என ஏற்று வாழத் தொடங்கினால் சமாதானத்திற்கு எதிரான அனைத்து தடைகளையும் வெல்ல முடியும். இவ்வருடம் நாம் வெளிப்பகட்டான ஆதாரங்களுடன் கிறிஸ்து பிறப்பு விழாவை கொண்டாட முடியாது. பல இடங்களில் நிகழந்து கொண்டிருக்கும் சண்டை, சச்சரவுகளினால் ஆண்களும் பெண்களும் சிறார்களும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் ஆடம்பரங்களைத் தவிர்ப்பது நன்று எம்மிடையே வருவதற்கு கிறிஸ்து எளிமையான முறையில் மனிதனாக பிறந்தது இன்று பல துன்பங்களை சந்திப்பவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்கு வழிகாட்டுகின்றது. விசேட விதமாக அகதி முகாம்களில் போதிய தங்குமிடம், பாதுகாப்பு போன்ற அடிப்படை வசதிகள் இன்றி அல்லல்படும் சிறார்கள் மீது எமது கவனம் திரும்ப வேண்டும். நத்தார் வாழ்த்து மடல்கள் அனுப்புவதையும் தேவையற்ற வெளிக்கொண்டாட்டங்களில் அதிக செலவுகளையும் தவிர்க்க வேண்டிய தற்கால சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட மறை மாவட்டங்களில் வாழும் சிறார்களின் நலனுக்கு இவற்றை செலவிட்டால் அது மிகவும பலன்தரும்.

எமது நாட்டிற்காக இக்காலத்தில் ஆழ்ந்த செபங்களில் ஈடுபட்டு தியாகத்துடன் செயற்பட வேண்டுமென மக்களாகிய உங்களை பார்த்து அவசர வேண்டுகோள் விடுக்கின்றோம். நாம் இந்த அழகிய கிறிஸ்தவ பிறப்பு விழாவில் அல்லல்படும் மக்களின் மீது அன்பை வெளிப்படுத்தி அவர்கள் பால் அக்கறையுடன் வாழ வேண்டும். அப்போது கிறிஸ்து பிறப்பின் உண்மை அர்த்தத்தை கொண்டுள்ள மகிழ்ச்சி உள்ளார் அமைதி, நம்பிக்கை எம்மில் ஏற்பட எம்மை இன்னும் ஆசீர்வதிப்பார் என்பதில் ஐயமில்லை.

## நத்தார்



இருளை நீக்கிட வந்தது நத்தார்
பொறுமையை விளக்கிட வந்தது நத்தார்
பணவெறியை அகற்றிட வந்தது நத்தார்
தீமையை நீக்கிட வந்தது நத்தார்

ஒளியை கொடுக்க வந்தது நத்தார்
அன்பை நாட வந்தது நத்தார்
கருணையை கொண்டு வந்தது நத்தார்
நன்மையை கொண்டு வந்தது நத்தார்

ஏழ்மை வாழ்கையை கற்றுக் கொடுத்தது நத்தார்
நல்ல மனம் கொண்ட மரியன்னையின் மடியில்
தேவ பாலன் தவழ்ந்தது நத்தார்
பாலகனின் வரவுக்காக வருடம் தோறும் ஆயத்தமாகும்
அனைத்து உள்ளங்களையும் கவர்ந்தது நத்தார்





தரம் 7 மாணவர்கள்
புனித தோமையார் பெண்கள் பாடசாலை
மாத்தளை.

## கிறிஸ்மஸ் எதனாலே?

கிறிஸ்து புவியில் பிறந்தது எதனாலே?
கிருபை கிடைக்கும் அம்மா அதனாலே!
மரியின் வயிற்றில் உதித்தது எதனாலே?
மனிதருக்கு மகிமை அளிக்கும் நோக்காலே!
நன்மை உண்டு குழந்தையின் நினைப்பாலே!
இடையருக்கு செய்தியை சொன்னது எதனாலே?
மக்களுள் உயர்வு தாழ்வு பேதமில்லை அதனாலே!
வானத்தில் புதியதோர் உதயம் எதனாலே?
மனதில் மீட்பர் பிறப்பார் அதனாலே!
தூதர்கள் கீதத்தை இசைக்குது எதனாலே?
துதிக்க வேண்டும் தினமும் அதனாலே!

அ. மநோபேட்
யாழ்ப்பாணம்




## இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த முன்வாருங்கள்

### உலக மதத் தலைவர்களிடம் இறைஞ்சுகிறார் மன்னார் ஆயர்

உள்நாட்டு மதத் தலைவர்களும், உலக மதத் தலைவர்களும் ஒன்றிணைந்து இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட முன்வர வேண்டுமென மன்னார் மறைமாவட்ட ஆயர் ராஜப்பு ஜோஸப் கோரிக்கை விடுத்துள்ளார்.


சமாதான முயற்சிகள் தொடர்பாக அரசியல்வாதிகள் மீது மக்கள் நம்பிக்கை இழந்த நிலையில், சர்வதேச மதத் தலைவர்கள் ஒன்றிணைந்து இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான அழுத்தங்களை உரிய தரப்பினருக்கு வழங்க ண்டுமென மன்னார் மரியன்னை தேவாலயத்தில் நள்ளிரவு நத்தார் தின கூட்டுத் திருப்பலியை ஒப்புக் கொடுத்த பின்னர் ஆற்றிய மறை உரையில் மன்னார் ஆயர் கோரிக்கை விடுத்தார்.

இரத்த ஆறு ஓடும் வகையில் கொடிய யுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்ற அனைத்துத் தரப்பினரும் யுத்தத்தைக் கைவிட்டு சமாதானப் பாதைக்குத் திரும்பவேண்டுமென கடந்த வருட நத்தார் தினத்தில் கோரிக்கை விடுத்திருந்த மன்னார் ஆயர், சமாதானத்தை ஏற்படுத்த சர்வதேச மதத் தலைவர்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளார்.

உள்நாட்டு மதத் தலைவர்கள் அனைவரும் ஒன்றிணைந்தால் மாத்திரமே இலங்கையில் இடம்பெறும் மோதல்களை முடிவுக்குக் கொண்டு வந்து சமாதானத்தை அடைய முடியும் என மன்னார் ஆயர் மறை உரையில் கூறினார்.

இடப்பெயர்வுகளும், அகதி வாழ்வும் என மாறி மாறி மக்கள் கஷ்டப்பட்டு வரும் நிலையில் மிகவும் ஆடம்பரமாக இல்லாமல், ஆன்மீக வழியில் நத்தாரைக் கொண்டாடுமாறு கோரிக்கை விடுத்த அவர், ஆடம்பரத்துக்காகச் செலவளிக்கும் பணத்தை இடம்பெயர்ந்திருக்கும் வறிய மக்களுக்கு அன்பளிப்பாக வழங்க வேண்டுமெனத் தெரிவித்தார். அத்துடன் சொந்த இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து மரங்களக்குக் கீழும் காடுகளிலும் தங்கியிருக்கும் மக்களையும் இந்த நத்தார் தினத்தில் நினைவு கூர்வதாகவம் அவர் குறிப்பிட்டார்.

## சிந்திக்க சில வரிகள்



- மது ஏற, ஏற மதி மயங்க, மயங்க மானம் சரியச், சரிய மரணம் நெருங்கிவரும்.
- மனையை அழிக்கும் மதுபோதையை அழி
- நல்லவனாய் இருந்தவனை நாதியற்றவனாக்கும் மது
- சக்தியில்லா மதுவைத் தவிர்த்து சக்தியுள்ள மனிதரை உருவாக்கு
- மானத்தோடு வாழ்ந்தவரை மதுவால் மதி இழக்கச்செய்வர் போலி நண்பர்
- மதியை மயக்கும் மதுவால் மானமிழந்தோர் அதிகம் பாரில்
- மதியால் வெல்ல முடியாதவர் மதுவால் மதிமயங்க வைப்பர் சதிகாரர்
- மதுபோதைக்கு அடிமையானோர் மானமிழந்தே மடிவர் பாரில்
- மதிகெட்டோராக்க மதுவை பருக்குவான் மானமிழக்கச் செய்யவே மதிகெட்டோர் ஒன்றுசேர்வர்
- மதுபோகி வேண்டாம் வேண்டாம் மதியாளரே வேண்டும் வேண்டும்
- உடன் வெறிக்கும் உயிர் குடிக்கும் குடி வெளியே குடும்பத்தை சீர்குலைக்கும்
- குதூகலச் சமூகம் மலர குடிபோதையை பாரில் நிறுத்து
- மறைவாய் குடிப்போரையும் மானம் இழக்க வைக்கும் மது
- குடும்பத்தின் கௌரவம் குடிபோதையால் அழிவதா?
- மதுவுக்கு கொடுக்கும் பணம் மனிதத்தை அழிக்கும் பிணம்
- நல்லவர் கெடுவதும் குடியாலே நற்பெயர் மறைவதும் மதுவாலே
- குடும்பத்தை அழிக்கும் குடிபோதையை தவிர்ப்போம்
- மரண வீட்டில் அழவைக்கும் மது திருமண வீட்டில் சிரிக்க வைக்கும்
- மதுச்சாலைகளை மூடி விடுங்கள் கல்விச்சாலைகளைத் திறந்து விடுங்கள்






நிலானி
புத்தளம்




காருணி
யாழ்

# நாட்டின் அமைதியையும் சமாதானமும் ஏற்படுத்த வழி என்ன?

**நாட்டின் அமைதியையும் சமாதானமும் ஏற்படுத்த வழி என்ன? அதற்கு எவ்வாறான வழிமுறைகள் கையாளப்பட வேண்டும் என்று வினவியபோது பல்வேறு தரப்பினரால் பாதைக்கு பகிர்ந்த கருத்து.**

இன்று இரு தரப்பினருக்கு இடையில் சுமார் 25வருட காலமாக இடம்பெற்று வரும் கோர யுத்தம் காரணமாக குறிப்பிட்ட ஒரு சமூகம் மட்டும் அல்லாது நாட்டின் சகல பிரதேசங்களைச் சேர்ந்த சகமக்களும் உடல், உளரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொருவருமே நாட்டின் அதி சமாதானம் ஏற்பட வேண்டும் என கூறி வருகின்றனரே தவிர அதற்கான வழிமுறைகளை கையாளத் தவறிவிடுகின்றனர். ஒவ்வொரு சமயமும் அன்பு, பண்பு, கருணை, ஈவு இரக்கம், அமைதி, சமாதானம் என்பவற்றையே போதித்து வருகின்றது. எனவே ஒவ்வொரு சமயத்தோரும் தமது சமயக் கோட்பாடுகளையும் அனுஸ்டானங்களையும் கண்டறிந்து அதற்கமைய செயற்படுவார்களேயானால் இந்நாட்டில் அதிவிரைவில் அமைதியும், சமாதானமும் ஏற்பட்டு இனங்களிக்கிடையே பரஸ்பர, சகோதரத்துவ, புரிந்துணர்வு ஏற்படும் என்பதிலும் அனைத்து சமூகத்தினரும் நலமுடனும், வளமுடனும் சுபிஷ்சமாக வாழ முடியும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. எமது நாட்டிற்கு சமாதானத்திற்கான வழி என்ன? அதனை நிலைநாட்ட உங்களது பங்களிப்பு என்ன என்பது என்று ஒரு சிலரிடம் வினா தொடுத்தபோது அவர்கள் வெளியிட்ட உள்ளக்குமுறல்களை கீழே தொகுத்து தருகின்றோம்.

இது சம்பந்தமாக மாத்தளை உதவிப் பங்குத்தந்தை அருட். தந்தை மானுவேல் அடிகளாரிடம் வினாவிய போது அவர் கூறியதாவது.

இலங்கையில் பல வருடங்களாக தொடர்கின்ற யுத்தத்தில் யார் எப்போது வெற்றி பெறுவார்கள் என்று யாராலும் கூறமுடியாது. எனவே இரு தரப்பும் விட்டுக்கொடுப்புடன் சமாதான பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதன் மூலம் ஒரு இணக்கப்பாட்டிற்கு வரமுடியும்.

மேலும் அரசாங்கம் இந்நாட்டு மக்கள் அனைவரரையும் இன, மத. மொழி, பிரதேச வாரியாக நோக்காது அனைத்து மக்களையும் இலங்கையர் என்ற கண்ணோட்டத்தில் நோக்கி அனைத்து சமூகங்களுக்கும் அனைத்து விடயங்களிலும் சம அந்தஸ்த்தும், சம உரிமையும் வழங்க வேண்டும். மனசாட்சிக்கு கட்டுப்பட்டு மனித உயிர்களுக்கு மதிப்பளித்தல் வேண்டும். அப்பாவி மக்கள் பாதிக்கப்படுவதை தடுக்க வேண்டும். இன குரோதங்கள் நீக்கப்பட வேண்டும். தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்படும்போது இன, மத, மொழி, தேசம் பாராது தகுதிக்கும், திறமைக்கும் முன்னுரிமை கொடுத்தல் வேண்டும் இவ்வாறான செயல்பாடுகள் மூலம் அனைத்து சமூகங்களை அரவணைத்து செயல்படும்போது நாட்டில் அமைதியும், சமாதானமும் மக்களிடையே இன ஒற்றுமையும் ஏற்பட்டுவிடும். இதனால் முழு நாடும் வளம் பெறும். அதே சமயம் மக்கள் நலம் பெறுவார்கள் என்றார்.

எனவே ஒவ்வொரு தனி மனிதனும் சுயநலத்தை மட்டும் கருதாது பொதுநலத்தையும் கருதி செயல்படும் வண்ணம் மதப்போதனைகளை போதிப்பதன் மூலம் இவ்வாறானதொரு கட்டுப்பாடான சமூகம் ஒன்றை உருவாக்கமுடியும் என்பதும் ஒவ்வொரு சமயத்தைச் சேர்ந்த மத குருமார்களும், போதகர்களும் இதனை அடிப்படையாக கொண்டு செயல்பட வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும் என்றார்.

இது சம்பந்தமாக அருட் சகோதரியின் கருத்து,

உகந்த உள்ளம் படைத்தவராக தமை உருவகித்துக் கொள்ளுவதே சமாதானத்திற்கு ஒவ்வொரு தனி மனிதனும் அளிக்கும் பங்களிப்பாக நான் கருதுகின்றேன். "உன்னதங்களிலே கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக! உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக" (லூக் 2/13-14) கடவுளுக்கு உகந்த உள்ளம் படைத்தோருக்கு மட்டுமே அன்பு, சமாதானம், அமைதி குடியிருக்கும். ஆனால் இன்று அவ்வாறானொரு உள்ளத்தை இனங் கண்டு கொள்ளமுடியாது. அமைதியும், சமாதானமும் நிலைத்தடுமாறிக் கொண்டு இருக்கின்றது. ஒவ்வொரு மனிதனும் தன்னைப்போல் பிறரை எண்ணுவதன் மூலமும் தனது உணர்ச்சிகளுக்கு எவ்வாறு மதிப்பளிக்கின்றோமோ அதேபோல பிறர் உணர்வுகளுக்கும் மதிப்பளித்து செயல் படுவதன் மூலம் சமாதானத்தை எய்து விட முடியும் என்றும் பிறர் மனம் புண்படாதவாறு செயல்பட வேண்டும் உடலால் மட்டுமல்ல உள்ளத்தாலும் பிறருக்கு தீமைசெய்யக் கூடாது. இவ்வாறான செயற்பாடுகள் அமைதிக்கும், சமாதானத்திற்கும் வித்திடும் ஒவ்வொரு சமயமும் இதனையே வலியுறுத்துகின்றது. எனவே சமய நெறிகற்று அறநெறி தவறாது வாழ்வதன் மூலம் எமது நாட்டில் விரைவில் சமாதானத்தை ஏற்படுத்திவிட முடியம் என்பதும் ஒவ்வொருவரும் இதன் அடிப்படையில் ஒழுக வேண்டும் என்பதுமே எனது நிலைப்பாடாகும்.

இது சம்மந்தமாக எல்பிட்டி பங்கைச் சேர்நத சமூகநலன் விரும்பியான திரு. நோயல் அவர்களிடம் வினவிய போது,

சமாதானம் என்பது ஒவ்வொரு மனிதனின் மகிழ்ச்சிக்கு வித்திடப்படும் ஒன்றாகும். இன்று நாட்டின் மட்டுமல்ல வீடுகளிலும் சமாதானத்தை காணமுடியாது உள்ளது. பச்சிளங் குழந்தை முதல் வயோதிபர் வரையிலாக அனைத்து தரப்பினரும் சமாதான காற்றை சுதந்திரமாக சுவாசிக்க முற்படுகின்றனர். ஆனால் அது கிட்டாமல் உள்ளது. அதை எண்ணும்போது வேதனையாக உள்ளது.

இறைவனின் சாயலாகப் படைக்கப்பட்ட மனிதன், மனித குலத்தின் மாண்புகளை மழுங்கடித்து இறை உணர்வை மறந்து தன்னிச்சையாகவும், தன்னைப் போல் பிறரை எண்ணாமலும் செயல்படுகின்றமையே இன்றைய வன்முறைக்கு மூல காரணமாகும். ஒவ்வொரு மனிதனும் சமாதானம் தேவை என உதட்டளவில் பேசிவருகின்றனரே தவிர அதற்கான உறுதியான நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பாக சிந்திப்பதில்லை. இறை அருள் முறையாக பெற்றுக் கொள்வது மூலம் சமாதானம் மலரும் என்ற உண்மையை மறந்து செயல்படுகின்றனர். அன்பு, பாசம், கருணை, இரக்கம் என்ற நற்குணங்கள் மறைக்கப்பட்டு போட்டி, பொறாமை, வஞ்சகம், பழிவாங்கலில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு பிறரை வஞ்சித்து வருகின்றனர். இவ்வாறான செயல்பாடுகள் மூலம் தனி மனிதனிடமே, நாட்டு மக்களிடையே சமாதானத்தை ஏற்படுத்திவிட முடியாது. ஒவ்வொரு மனிதனையும் தனது உடன் பிறப்பாகவும், உறவினராகவும், பெற்றோராகவும் கருதி அன்பு மழைபொழிந்து ஒழுகுவதன் மூலம் ஒவ்வொரு தனி மனிதனிடமும் தானாகவே சமாதானம் ஏற்பட்டுவிடும். எனவே ஒவ்வொரு மனிதனும், சுயநலம் கருதாது, பிறர் நலம் கருதியும் செயல்படுவதன் மூலம் அனைத்து உள்ளங்களிலும் அன்பும், கருணையும் மலர்ந்து எம் நாட்டில் நிச்சயம் சமாதானம் ஏற்படும். ஒரு பொது மகன் என்ற முறையிலும் இலங்கையன் என்ற முறையிலும் ஒவ்வொருவரும் இவ்வாறு செயல்படவேண்டும் என்பது நிலைப்பாடாகும் என்றார்.

இது சம்மந்தமாக கல்கமுவ பங்கை சேர்ந்த ஆசிரியர். A. டொமினிக் மரியதாஸ் வினவிய போது அவரின் கருத்து,

உயிர்த்த கிறிஸ்து தமது சீடர்களை சந்தித்த ஒவ்வொரு முறையும் "சலோம்" (உங்களுக்கு சமாதானம்) என்று அவர்களை வாழ்த்தினார். ஒவ்வொரு தனி மனிதனும் (இலங்கை பிரஜையும்) தனது அயலானைப் பார்த்து உங்களுக்கு சமாதானம் என்று கூறும் மனப்பக்குவம், மனநிலை என்று ஏற்படுகிறதோ அன்றுதான் இலங்கையின் சமாதானத்திற்கு வழி பிறக்கும்.

நல்ல ஆளுமைப் பண்புகளை வளர்த்துக் கொள்ளுதல், மற்றவர்களுடைய மனவேதனைகளை அறிந்து உதவுதல், தன்னிலை சமாதானத்தை என்னுள் ஏற்படுத்திக் கொண்டு குடும்ப அங்கத்தவர்களுடன் பரஸ்பர நட்புறவைக் கட்டியெழுப்புதல் எமது சாந்தமான மன எழுச்சியை அயலவர்களுக்கு வெளிப்படுத்தல் பகிர்ந்து கொள்ளுதல் ஆகிய பண்புகள் மூலம் சமூகத்தில் சமாதானத்தை ஏற்படுத்தலாம். குடும்பத்தில், சமூகத்தில் அமைதி ஏற்படும் போது நாட்டில் சமாதானம் மலரும்.

இது சம்பந்தமாக சிலாப கரித்தாஸ் ஜனசவிய செடேக் நிறுவனத்தில் பணிபுரியம் செல்வி S. ஜெயகாந்தி வினவியபோது அவர் கூறியதாவது,

ஓர் நாட்டின் உயர்ச்சி அந்நாட்டின் அமைதியில், சமாதானத்தில் தங்கியிருக்கிறது. எந்த மதமும் குறிப்பிடுவது அமைதியே ஆகும். ஆனால் எமது நாட்டில் யுத்தம் வெற்றி பாதையிலும், சமாதானம் அழிவுப் பாதையிலும் அன்றோ செல்கின்றது. இதற்கு காரணம் யார்? என கேள்வியெழும்போது நாம் அனைவரும் அரசாங்கத்தையோ, வேறு கட்சிகளையோ அல்லது வேறு அமைப்புக்களையோ தான் சுட்டிக்காட்டுகின்றோம். ஒருவராவது நாமும் அதற்கு காரணம் என்று நினைப்பது இல்லை. என்னவேன்று கேட்போருக்கு இதோ... நாம் அனைவரும் இலங்கை மாதா குழந்தைகள் இருப்பினும் இனம், மதம், குலம், கலாசாரம் என்று பல பிரிவுகளுடன் ஒருவருக்கு ஒருவர் குரோதங்களையே வளர்த்துக் கொண்டு வாழ்கின்றோம். நாம் ஒருவராவது எமது தீய எண்ணங்களை மாற்றிக்கொண்டு சமூக மாற்றத்துக்காக, சமாதானத்துக்காக முன்வருவது உண்டா?

எம் பிரான் யேசு சமூதாயத்துக்கு முன் நடந்து நல்வழியில் மக்கள் அமைதியுடன் வாழ வழிவகுத்து தந்தவர் முழுமையான பூர்வமான மனித வாழ்வின் மகத்துவத்தை தெளிவுபடுத்தனர். ஏன் அவரின் குழந்தைகள் நாம் முன்வர தயங்குகின்றோம். இதை மாற்ற எம்மால் முடியாதா? சிந்திக்க....

எமது நாட்டில் சமாதானத்தை நிலைநாட்ட பேச்சுவார்த்தை, ஒப்பந்தம் என்றெல்லாம் நடைமுறைப்படுத்தப்பட்டன. ஆனால் அதில் அதை சரியான முறையில் அமுல்படுத்தவில்லை. எமது நாட்டுக்கு முக்கியம் பேச்சுவார்த்தையே ஆகும். ஆனால் அது வெற்றி இலக்கை நோக்கிச் செல்ல வேண்டும் அதற்கு அவதானத்துடன் சில உபாயங்கள் வகுத்துக்கொள்ள வேண்டும். சமாதானத்தை விரும்பும் சக்திகளை இனங்கண்டு அவர்களுடன் ஒன்றிணைந்து அனைவரது ஒத்துழைப்பும பெற்றுக்கொண்டு பக்கச்சார்பற்ற, ஆக்க பூர்வமானதாக செயற்திட்டங்களை வகுத்துக்கொண்டு அதனூடாக பயணிக்கும் போதுதான் நாம் சமாதானத்தின் பாதையின் இலக்கை அடைய முடியும். இந்த இலக்கை அடைய அனைவரும் ஒருவராய் ஒரே எண்ணத்துடன் தொழிற்பட வேண்டும்.

ஒரு நாட்டில் சமாதானத்தை வளர்த்தல், கடைப்பிடித்தல், காத்தல் என்பன எல்லாப் பிரஜைகளினதும் கடமையாகும். அதற்கான பங்களிப்பு, பொறுப்பு அனைவரையும் சாரும் தனிமனிதனாக சமாதானத்துக்கு தன்னால் பங்களிப்புச் செய்யலாம். பிரார்த்தனைகள் வழியாக ஆனாலும் மேலதிகமாக சமாதானத்துக்காய் தன்னை ஆர்ப்பணிக்க இல்லாவிடின் தன்னை சுற்றியுள்ள பிரதேசத்தில் குழுவொன்றை அழைத்துக் கொண்டு சமாதானத்தின் அவசியத்தை மற்றவர்களுக்கு தெளிவுபடுத்த எம் அனைவராலும் இயலும். ஒரு குறுகிய மட்டத்தில் சமாதான செயற்பாடுகளுக்கு பங்களிப்பு செய்து மட்டும் நாம் நின்று விடகூடாது கிராம மட்டத்தில் ஆரம்பித்து தேசிய மட்டம் வரை முன்னின்று செயற்படுத்த வேண்டும். இவற்றை செய்வது சாதாரண விடயம் அல்ல மிகவும் சவால்களுக்கு மத்தியில் நம்மை அர்ப்பணிக்க வேண்டும் அதற்கு தனிமனித மனங்களில் எழும் கோபம் பொறாமை விரக்தி சோகம் ஏமாற்றம் பரபரப்பு போன்றவற்றில் ஏற்படும் விபரீதங்களை, பாதிப்புக்களை விளங்கிக் கொண்டு அதற்கான அறிவூட்டல்களைப் பெற்றுக் கொண்டு தீய குணங்களில் இருந்து விடுபட்டு நல்லெண்ணப்பாதையில் சமாதானம் சார்பாக நாம் அனைவரும் ஒரே குரல் கொடுத்தால் எம் அனைவராலும் முடியும் சமாதானக் காற்றை சுவாசிப்பதற்கு. இதற்காக சிலாப மறைமாவட்ட கரித்தாஸ் சிலாபம் ஜனசவிய செடக் நிறுவனம் பாரிய செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்திக் கொண்டு சமூதாய மாற்றத்துக்கு சக்தியாக உள்ளது.

இது சம்மந்தமாக போதகர் ஈனொக் பூ. புனிதராஜா வினவிய போது அவரின் கருத்து,

சமாதானம் மலர ஆன்மீகத்தில் ஆழப்படுத்தி உழைக்க யாவரும் முன்வர வேண்டும். அரச பணியால் மட்டும் சமாதானத்தை எதிர்பார்த்தால் ஏமாற்றமே மிஞ்சும். தனி மனித அகச் சமாதானம் இன்றி புற சமாதானத்தை அனுபவிக்க முடியாது என்பதே நாம் கண்ட அனுபவம். தினம் தினம் எமது ஆன்மீகம் புதுபிக்கப்பட வேண்டும். பிறர் துன்பம் உணரும் நிலை பிறர்கருத்துக்கு மதிப்பளிக்கும் மனப்பக்குவம் ஆன்மீகத்தில் ஆழப்படுத்தி கடினமாக உழைத்தால் சமாதானத்தை அனுபவிக்க முடியும்.

# சமாதானம் பேசப்படுவதற்காக வா?

எமது நாட்டில் எல்லோராலும் பேசப்படும் சொல்லாக மாறிவிட்ட "சமாதானம்" எனும் சொல்லாடல் எந்த வகையில் அர்த்தம் ஊட்டப்படுகிறது. அந்த சொல்லின் பொருள் தேடி ஐ. நா. சபையால் பிரகடனப் படுத்தப்பட்ட உலக சமாதான தினத்தை பலராலும் பல வழிகளில் பல திசைகளில் நின்று உரத்து பேசப்படுகின்றது.

யாருக்கு? யாரால்? எந்த வகையில் சமாதானத்தை அனுபவிக்க முடியும். அதன் வெளிப்பாடுகள் எவை என்று சொல்லாடல் பலமாக இருந்தாலும் செயல்படுவதில் முன் மாதிரிகள் யார் என்று தேடிக் கொண்டு பேசாப் பொருளாய் இருந்ததை பேசவைத்த நிகழ்வுகளுடன் நினைவுநாள் நிறவைு பெற்று விட்டதா?

சமாதானத்துக்கான விலை என்ன? எத்தனை உயிர்கள் எத்தனை அவலங்கள் இதனைப் பெற, அனுபவிக்க எத்தனை கோடி பணம் தேவைப்படும் என கணக்கிட்டு திட்டம் போடும் நிலையில்தான் சமாதானத்துக்கான போர், சமாதானத்துக்கான பேச்சுவார்த்தைகள் சமாதானத்துக்கான சர்வமத சந்திப்புக்கள், சமாதானத்துக்கான இடைத்தரகர்கள் (தூதுவர்கள்) சமாதான சுற்றுலாக்கள், கட்டமைப்புக்கள் எல்லாம் பாமர மக்களின் தலைமேல் ஏற்றப்பட்ட வரிகளாகவும், சுமைகளாகவும் காட்சிப்பொருள்களாகவும், எழுத்துருக்களாகவும், காற்றோடு காற்றாக கரைந்து போனதுவோ என்ற ஏக்கத் தொனிகள் தீரவில்லை.

சமாதானமும், யுத்தமும் வித்தியாசம் இன்றி, இரவும் வரும் பின் பகலும் வரும் என மாறி வரும் அனுபவங்களே மிஞ்சியுள்ளது என்றும் ஏதிலிகளாக, முகாம்களிலும், முனங்களிலும் முடங்கி வாழ்வாதாரமே இன்றி வாழ்நாள் கரைகின்றது. இவற்றை செய்திகளாகவும், சுவரொட்டிகளாகவும், விளம்பரப் பதாதைகளாகவும் கண்டுகளைத்து விட்ட மனித மனங்களுக்கு "சமாதானம் செய்வோர் பேறு பெற்றோர்" என்ற தேவைகள் எதிர்பார்ப்புகள் இன்றும் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது.

சமாதானம் பார்ப்பதிலும், கேட்பதிலும், இரங்குவதிலும் தினம் நினைவு கூறுவதிலும் இல்லை. வாழ்வோடு பின்னிப் பிணைந்ததுதான் என்பதை வாழ்ந்து வழிகாட்டிய வள்ளல் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தோம் என்ற பெருமையுடன் அவரது வாழ்வு முன் மாதிரியானதே. தென் ஆபிரிக்கா தந்த தலைவன் நெல்சன் மண்டேலா எமக்கு வாழ்ந்து காட்டினார்.

அரசியல் தலைவனாக வர எத்தனையோ குறுக்கு வழிகள் இருந்தும் தன்னை அடக்கிய தன் சமூகத்தை அழுத்திய அடிமை வாழ்வுக்கு விடைதேடி பதினாறு வயதில் களம் புகுநதார். அந்த இளம் வயதின் துடிப்பு, ஆவேசம், வலிமை எப்படி இருந்தது, எப்படி சிறைக்கைதியானார், எப்படி பக்குவ நிலை அடைந்தார் என்பது வாழும் காலத்தில் நாம் அறிந்த செய்திகளே. "நண்பர்களுடன் அல்ல, எதிரிகளுடன்தான் முதலில் சமாதானம் பேசுவோம்" என்று சொல்லாடல் மட்டும் புரியவில்லை. செயலால் முன்மாதிரியான அவர் தலைமை எல்லோருக்கும் முன் உதாரணமாக வேண்டும்.

சமாதானம் செய்ய பணம்தேடி, பதவி தேடி, பரம்பரைதேடி அலையவில்லை. பங்காளரை உருவாக்கி அதன் பொருளை உணர வைத்து மற்றவர்களிடம் கொடுத்து செல்லும் தலைமையின் பெரு தன்மை யாருக்கு எம் மண்ணில் வரும்? அப்போது சமாதானம் செய்தவர் பேறு பெற்றவர் என உலகமே வாழ்த்தும். இதை வாழ்ந்து வாழ்த்தைப் பெற்றவர் வாழ்ந்த காலத்தில் எமக்குள் தேடும் சமாதானம் வார்த்தை வடிவங்களா? செயல் வடிவங்களா? என தேடலை ஏற்படுத்தும் போதுதான் அந்த தலைவன் நெல்சன் மண்டேலா சமாதானத்தின் தலைவராகத் தெரிவானார். "புன்னகையே சமாதானத்தின் திறவுகோல்" எங்கே, யாரிடம் அந்த புன்னகையை பகிர்ந்து சமாதானத்தின் தூதர்களாக நாம் ஆரம்பிப்போம். எமது உறவுகள், நட்புகள் உதவியளிப்போர், உயர்பதவிகள், நிவாரணங்களுக்காக உதிர்க்கும் புன்னகையை விட உன் பகைவனிடத்தில் அன்பை செலுத்தும் புன்னகையில் பிறக்க வேண்டும், தொடர வேண்டும் அங்கே மலர்வதுதான் உண்மையான சமாதான ஊற்று.

போலிச் சமாதானம் பொருளோடும், பணத்தோடும், பதவியோடும் மலினமாகிவிடும். உண்மைச் சமாதானம் ஆலயத்தில், கோவிலில், மசூதியில், விகாரை கட்டிடங்களுக்குள் மட்டும் முடங்கி விடாது அது வாழும் சமூகத்தில் போராடும், சமாதான குரலாக பிறருக்காக எழும். துயரில் தன்னை இணைத்து அமைதிக்கான அன்பினை விதைக்கும் பிறர் மகிழ்வில் தன்னைக் கரைத்து, பகைமையில்லா அன்பினை விதைத்து உண்மை சமாதானம் மலர உழைக்கும்.

அன்று அசோகவர்த்தனன் போராடி பெற முனைந்த வெற்றிக்களிப்பில் போர்முனையில் தாகத்தைத்தீர்க்க முனைந்தபோது மூதாட்டி உறிய வார்த்தைகள் அவன் மனதை சுத்தப் படுத்தியது போல் இத்தனை உயிர்காவுதலும், உளக்காயப்படுத்தல் வார்த்தைகளும், சுய நலத்துக்காக பிறரை துன்புறுத்திய செயல்களும் உங்கள் வாழ்வில் இருந்து கலையும் வரை உண்மை சமாதானம் என்பது ஏட்டுச் சுரைக்காய்களாகவே வெளிப்படும்.

சமாதானம் பேசப்படுவதற்காக அல்ல
சமாதானம் வாழப்படுவதற்காக
சமாதானத்தின் தூதுவராக வாழ்வாக
வாழ்த்துவோம், வாழ்வோம்

யோகா
யாழ்

"அதிக நன்மை செய்பவன் உயர்ந்தவன்"

# பிறக்கும் புத்தாண்டில் ஒரு தீர்மானத்தை செயல்படுத்துவோமா?

உங்களால் இப்புத்தாண்டில் ஒரு நல்ல காரியம் செய்து உங்கள் பங்களிப்பால் நற்பணியின் பங்காளராக அழைக்கின்றோம்.

உங்களால் முடியும் : உங்கள் உள்ளத்துக்கு மட்டுமல்ல, உங்கள் சூழலில் பிறர் செயற்படத்தூண்டுவதில், விழிப்பூட்டும் உங்கள் தீர்மானம், செயற்பட வாழ்த்துக்கள் அதற்கான ஆலோனைகள் இதோ

1. ஒரு மரக்கன்று நாட்டி இயற்கையுடன் இணைந்து மகிழ்ந்துகொள்ளல்
2. ஒரு மாணவரை பாடசாலைக்கு சேர்த்துவிட்டு அவரது அறிவாற்றலை தூண்டுவித்தல் ஒரு அறிவிலியை குறைத்து ஒரு அறிவாளியை உருவாக்க
3. ஒரு பகைவனுடன் நலம் பகிர்ந்து நட்பை வளர்த்து சமாதானத்தின் தூதராக
4. ஒரு துன்புறுவோரின் துயர் பகிர்ந்து அவர் மகிழ்வில் துணையாளராய் இருத்தல்
5. ஒரு மணி நேரம் ஆன்மீகத்தில் அமைதியாக இருந்து மனதை இறை அன்பில் இணைத்துக்கொள்ளல்
6. ஒரு அயலவரை நண்பரை இப்பணியில் இணைத்து ஈடுபடுத்திக்கொள்ள
7. ஒரு வாரத்தில் ஒரு நாள் உபவாசம் இருந்து பிறருக்கு உதவுவதில்

உங்களால் முடியும் உங்கள் மனதை ஒருமுகப்படுத்தினால் ஒருமுறை முயற்சித்து தீர்மானம் எடுங்கள். உங்களால் முடியும் செயற்பட்டதின் அனுபவத்தை பாதை வாசகருடன் பகிருங்கள். நத்தார், புத்தாண்டு, பொங்கல் வாழ்த்துக்கள்.



"அமல உற்பவம் நாமே" என புனித பெர்ணதேத்தம்மாளுக்கு எடுத்துரைத்த அன்னை மரியாளின் அமல உற்பவத்திருநாளன்று சிலாபம் சென். பேர்ணடெற் தமிழ் மகாவித்தியாலயத்தில் லூர்து அன்னைக்கு கெபி ஒன்று அமைத்து அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

பிரான்சில் லூர்து நகரில் தேவதாய் புனித பெர்ணதேத்தம்மாளுக்கு தரிசனம் அளித்து 150 ஆண்டுகள் நிறைவையொட்டி திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர் அவர்கள் 2008ம் ஆண்டை யூபிலி ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளார். 150வது யூபிலி ஆண்டின் ஆரம்ப நாளாகிய 08.12.2007 அன்று லூர்துகெபி திறந்து ஆசீர்வதிக்கப்பட்டது இவ் விழாவிற்கு வருகைதந்த சிலாப பங்குத்தந்தை ஐவன் பீற்றர் பெர்னாண்டோ அடிகளாரினால் கெபி திறந்து வைக்கப்பட்டது. அருட் தந்தை M. ஞானப் பிரகாசம் அவர்கள் கெபியினை ஆசீர்வதித்தார். இக் கெபிக்கான அடிக்கல் உதவிப்பங்குத் தந்தை அரோஸ் அடிகளினால் 31.10.2007 அன்று நாட்டப்பட்டது. இவ் விழாவிற்கு அருட் தந்தையர்கள், அருட் சகோதர், அருட் சகோதரிகள், பங்குமக்கள் கலந்து கொண்டனர். இவ் விழாவின் நினைவாக சிறப்புமலர் ஒன்றும் அன்றைய தினம் வெளியிடப்பட்டது.

## புனித பத்திரிசியார் ஆலய ஒளிவிழா

புனித பத்திரிசியார் ஆலய ஒளிவிழா கடந்த 15ஆம் திகதி நடைபெற்றது. பங்கு மக்களின் ஒத்துழைப்புடன் பங்குத்தந்தை அருட்திரு லெனாட் மற்றும் உதவி பங்குத்தந்தை அருட்திரு நிலங்க டயஸ் அவர்களின் உதவியுடன் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வின் சிறப்பு அதிதியாக அருட்சகோ.செ.தொபியாஸ் கலந்து கொண்டார்

சிறப்பு அதிதி தனது உரையில் ஒளியாம் கிறிஸ்துவே உலகின் ஒளி அவ் வொளியால் உலகில் தோன்றியதை நாம் இன்று ஒளிவிழாவாக கொண்டாடுகிறோம் இருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டனர். (ஏசாயா 9:2) கிறிஸ்துவோ நானே உலகின் ஒளி என்றார் அவர் நன்மையும் உலகின் ஒளியாக வாழ அழைக்கின்றார் (லூக் 8:16) அவ் ஒளி மற்றவர்கள் முன்பிரகாசிக்க வண்டும். மரக்களின் கீழ் வைக்காமல் விளக்குத்தண்டின் மீது வைக்கப்படல் வேண்டும் என்றார். மேலும் தொடர்ந்து 16ம் ஆசீர்வாதப்பர் பாப்பரசரின் "நசரோந்து இயேசு" என்ற சுற்றுமடலையும் பற்றி விளக்கினார். அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் இயேசுக்கிறிஸ்த்து இவ்வுலகிற்கு கொண்டு வந்நது என்ன? என்பது அதனைத்தொடர்ந்து பங்குத்தந்தை தனது சிறப்பு உரையில் எமக்கு இக் கிறிஸ்மஸ் விழா கொடுக்கும் செய்தி பகிர்தல் எம்முடன் உள்ளதைப் பகிர்ந்து வாழ்வதன் மூலம் இக்கிறிஸ்மஸ் விழா அர்த்தமுள்ள விழாவாக அமையும்.இன்றைய காலத்தின் தேவையை உணர்ந்து வட கிழக்கு மக்கள் துன்பப்படும் எம் சகோதரர்களுடன் எமக்குள்ளதை பகிர்ந்து வாழ்வோம் என்றார் உதவிப்பங்குத்தந்தை அருட் திரு நிலங்க தனது உறையில் கிறிஸ்மஸ் கிறிஸ்து பிறப்பு விழா. எனவே சாதாரண குழந்தையின் பிறந்த நாளுக்கு எல்லாவித ஆயத்தம் செய்வோம் ஆனால் அதற்குரிய குழந்தையை கவனிப்பதில் தவறிவிடுகின்றோம். எனவே நாம் எல்லா ஆயத்தம் செய்வதில் விணாக செலவிடும் அந்த குழந்தை இயேசுவின் பிறப்பைக் கொண்டாட அவரைக் கண்டு கொண்டு அவரை மகிமைப்படுத்தி ஆராதித்து வணங்கி அவரின் பிறப்பு விழாவை சிறப்பிப்போம் என்றார்.

# கிறிஸ்தவ குடும்பமொன்றின் பொறுப்பு

கிறிஸ்தவ குடும்பமானது திருமணம் அல்லது மெய் விவாகத்தின் மூலம் ஆரம்பமாகின்றது. இது ஓர் திருவருட் சாதனமாகும். குடும்பமொன்றை கட்டியெழுப்ப ஆண், பெண் ஆகிய இருவரின் அன்பினால் சுதந்திர விருப்புடன் எற்படுத்திக் கொள்ளும் ஓர் ஒப்பந்தமாகும். இவ் ஒப்பந்தத்திற்கு விசுவாசமாய் இருப்பதனால் கிறிஸ்தவ குடும்பத்திற்கு இறை ஆசீர் கிடைக்கும். இதுவே கடவுளுடைய விருப்பம். இதை நாம் வேதாகமம் (தொடக்க நூல் 2:18) வசனத்தில் பார்க்கலாம். உலக ஆரம்பத்தின் போதே விவாகம் ஸ்தாபிக்கப்பட்டது. மனிதன் தனிமையாய் இருப்பது நல்லதன்று என நினைத்த கடவுள் அவனுக்கு தகுந்த துணையை உருவாக்குவேன் என்றார்.

எனவே கணவனும் மனைவியும் இருவரல்ல இவ்விருவரும் ஒருவராவதால் இவர்கள் ஒரு வரை ஒருவர் புரிந்து கொண்டும் ஒருவரை ஒருவர் மதித்தும் இன்பத்திலும் துன்பத்திலும் உதவி செய்ய ஒப்பந்தத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர். அன்பினால் தொடங்கி அன்பினால் உயிரோட்டம் பெறும் குடும்பம் பெற்றோர் பிள்ளைகள் ஆகியோர் உட்பட ஒரு சிறு சமூகமாகும். திருமணம் செய்யும் இருவரிடம் இருக்க வேண்டிய அன்பு கிறிஸ்து தனது திருச்சபையின் மீது வைத்துள்ள அன்புடன் ஒப்பிடுகின்றார்.

இது குடும்ப ஆரம்பத்திலேயே கடவுளின் விருப்பும் பொறுப்புமாக அமைகின்றது. கடவுள் மனிதனிடம் ஒப்படைத்த இன்னுமொரு விசேட பொறுப்பானது (தொடக்க நூல் 1-28) வசனங்களில் கூறப்படுகின்றது. "பல்கிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள்". மனித வாழ்வை கொடுத்த இறைவன் அதனை பாதுகாக்கும் பொறுப்பை நிறைவேற்றுவது கிறிஸ்தவ குடும்பங்களின் சிறப்பாகும். இன்றைய கிறிஸ்தவ குடும்பங்கள் தன் பொறுப்பை உணர்ந்துள்ளதா? புரிந்துணர்வு, இன்மை, சந்தேகம் போன்ற கொடூர குணங்களினால் குடும்பமென்பதை மறந்து பிரிந்து வாழ்கின்றனர். தாம் நினைத்த படி வாழ்கின்றனர்.

கடவுளின் விருப்பத்திற்கேற்ப குடும்ப வாழ்வை ஆரம்பித்து அன்பின் பரிசாக கிறிஸ்தவ குடும்பத்தில் பிறக்கும் பிள்ளைகள் இறைவனின் கொடைகள் எனவே பிள்ளைகளின் உடல், உள. ஆன்ம வளர்ச்சிக்காக உழைக்கும் பொறுப்பு பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுது. கிறிஸ்தவ விசுவாசம் பிள்ளைகளுக்கு தாய்பாலினூடாகவே ஊட்டப்படுவதாக கூறப்படுகின்றது. "பிள்ளைகளே உங்கள் பெற்றோருக்கு கீழ்படியுங்கள்" என வேதாகமத்தில் கூறப்படுகின்றது. எனவே பிள்ளைகள் பெற்றோர் மட்டில் அன்பு, மரியாதை, கீழ்படிதல் போன்ற குணங்களுடன் வாழ வேண்டும். பெற்றோரை பராமரித்தல் போன்ற குணங்களுடன் அவர்களின் அனுபவங்களிலிருந்து பயன் பெறுவதும் அறிவுரை பெறுவதும் கிறிஸ்தவ பிள்ளைகளின் பொறுப்பாகும்.

இப்பொறுப்பை நிறைவேற்ற கிறிஸ்தவ பிள்ளைகள் முயற்சி செய்வதுடன் வீட்டை அன்பு சுற்றாடலாக மாற்றி அயலவர் மத்தியில் கிறிஸ்தவ அன்பிற்கு சாட்சி பகர்ந்து வீட்டு சமூகத்தை உருவாக்கும் பொறுப்பு பிள்ளைகளுக்கு உண்டு. ஒன்றாய் செபிக்கும் குடும்பம், ஒன்றாய் வாழும், செபமில்லாத குடும்பம் கூரையில்லா வீட்டிற்கு சமன் என்பார்கள். குடும்பம் எனும் போது செபம் முக்கியமானது. பெற்றோர் தமது பிள்ளைகளை போஷித்து கல்வியூட்டி மனிதவிழுமியங்களை போதித்து திருவருட் சாதன அழைப்புக்கு ஏற்றவகையில் வாழ கற்பிக்க வேண்டும். பிள்ளைகள் வளர்ந்த பின் தம் கடமையை நிறைவேற்ற தேவையான பயிற்சி கிறிஸ்தவ குடும்பத்திலிருந்தே கிடைக்க வேண்டும். குடும்பங்களின் பொறுப்பை ஒவ்வொருவரும் உணர்ந்து செயற்படும் போது, சமூகமும் பொறுப்புகளை நிறைவேற்றி வாழ முனைகிறது. ஆகவே கிறிஸ்தவ குடும்பங்களின் பொறுப்பானது திருச்சபையின் கட்டளைகளுக்க பணிந்ததாகவும் இவற்றை உண்மையான திருவருட்சாதன மெய்விவாகத்தினூடாகவும் நிறைவேற்றவும் செயற்பாடுகளினூடாக தங்களுடைய பிள்ளைகளை முன்மாதிரியான கிறிஸ்தவ பிள்ளையாக வளர்க்கவும் இன்றே கிறிஸ்தவ குடும்பங்கள் பொறுப்பேற்க வேண்டியது அவசியமாகும்.

**J. ரொஸ்லின் ஜெனிட்டா**
**இதல்கஷ்ஸின்ன**
**அப்புத்தளை**


## "இளைஞனே உனக்கோர் அவசர அழைப்பு"

அமைதியை தேடும் உள்ளங்களை ஆற்றுப்படுத்த, அன்பினை தேடும் சிறுவர்களை நல்வழிப்படுத்த, ஆன்மீக அறிவினை அகிலத்தில் பரப்பிட அசீசி பிரான்சிசின் பாதையில் அன்புப் பணியாற்றிட உன்னால் முடியும், விரைந்து வா.

புனித பிரான்சீஸ்கன் சகோதர சபையில் இணைந்து கொள்ள நீயும் ஓர் அருட் சகோதரராகி உன் பணியினைத் தொடரலாம். ஆன்மீகப் பணியுடன், அறிவு தேடலால் நீ உயர்வு பெற்று அன்புப் பணியில் இணைந்து பணியாற்ற இளைஞனே! உனக்கோர் அன்பு அழைப்பு இது. O/L - A/L கல்வித் தகைமையுடன் விண்ணப்பங்களை உடன் அனுப்பி வையுங்கள். பயிற்சிகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளது.

Vocation Director,
Franciscan Brothers,
116, Vihara Road, Matale.
066-2223032


## அமைதியும் அன்பும் கொண்ட சமூகமொன்றை கட்டியெழுப்ப அனைவரும் முன்வர வேண்டும்

**ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை**

ஆயுதங்களுக்கு விடைகொடுத்து அமைதியும் அன்பும் கொண்ட சமூகமொன்றை கட்டியெழுப்ப அனைவரும் முன்வர வேண்டுமென்று மட்டக்களப்பு, திருகோணமலை மறைமாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை விடுத்துள்ள கிறிஸ்மஸ் தினச் செய்தியில் தெரிவித்துள்ளார். அவர் விடுத்துள்ள கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நீடித்த, நிலையான அமைதிக்கான தேடலோடு மீண்டும் நாம் அந்த அமைதியின் அரசரது பிறப்பினைக் கொண்டாடுகின்றோம். எனினும், நாளாந்த நிகழ்வுகள் எமது சமூதாயத்தின் நம்பிக்கையை பலவீனப்படுத்திக் கொண்டே இருக்கின்றன. குண்டிவெடிப்புகள், தாக்குதல்களில் சிதறிப்ஃபோகும் உடல்கள், சுதந்திரக் காற்றை சுவாசிக்க முடியாமல் ஏற்படும் திணறல்கள், அவசரக்காலச் சட்டத்தையே அன்றாட வாழ்க்கையாக்கிக் கொண்ட அவல நிலை போன்றவற்றின் மத்தியில் அமைதிக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் எமக்கு அமைதி ஒரு தூரக்கனவாகவே உள்ளது.

கிறிஸ்து தமது வாழ்விலும் போதனையிலும் மனித நேயம், அன்பு போன்ற விழுமியங்களை மிகத் துல்லியமாகக் கூறியிருக்கிறார். "அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர்..." என்ற தனது மலைப் பொழிவில் கூறியுள்ளார்.

தடம்புரண்டு, சகோதர உணர்வுகள் உடைத்தெறியப்பட்டு, வாய்பேச முடியாத நிலையில் தனி மனிதனாக எம்மால் எதுவும் செய்ய முடியாதபோதும் பாதிக்கப்பட்டவர்களுக்கு, இல்லாதவர்களுக்கு பகிர்ந்தளிக்கும் நல் உள்ளம் கொண்டு உதவிக்கரம் நீட்டி அவர்களின் கண்ணீரைத் துடைக்க, கவலையைப் போக்க எம் கவனத்தைத் திருப்புவோம். எம்மிடமுள்ளதை இயன்ற வரை இல்லாதவர்களோடு இடம்பெயர்ந்து பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்து வரும் மக்களோடு பகிர்ந்துகொண்டு அவர்களும் இந்நாட்களில் தம் துன்பம் மறந்து மகிழ்ந்திட உதவிபுரிவோம்.

சுவாலைவிட்டு எரிகின்ற பிரச்சினைகளை இருசாராரும் அலசி ஆராய்ந்துதான் ஒரு நிரந்தரத் தீர்வை எட்ட முடியும். எனவே, மீண்டும் ஒரு யுத்தநிறுத்தம் உடனடியாக ஏற்படுத்தப்பட வேண்டுமென்று வலியுறுத்திக் கூறவிரும்புகின்றோம்.

## பாப்பரசரின் "நசரேத்தூர் இயேசு"

திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் பாப்பரசரின் நசசரேத்தூர் இயேசு என்ற நூல் உலகம் முழுவதிலும் 2 மில்லியன் பிரதிகள் விற்பனையாகி சாதனை படைத்துள்ளது. இவ்வாண்டு ஏப்ரல் மாம் ஜேர்மன் போஸ், இத்தாலியன் ஆகிய மொழிகளில் வெளியிடப்பட்ட மேற்படி நூல் மேலும் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டது. பாப்பரசரான பின் வெளியிடப்பட்ட இவரது இந்த முதலாவது நூல் வேதாகமத்தில் இயேசு எப்படிச் சித்தரிக்கப்பட்டுள்ளார். அவரின் போதனை விழுமியங்கள் எப்படிப் படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளன. வேதாகமத்தைப் படிப்பதன் மூலம் எப்படி இயேசுவோடு ஓர் உண்மையான உறவில் இணையலாம் போன்ற விடயங்கள் மிகத் தெளிவு படுத்தப்பட்டுள்ளன.

கத்தோலிக்க புத்தக அமைப்பின் அறிக்கைப்படி 400 பக்கங்கள் கொண்ட இந்த புத்தகம் கடந்த 3 மாதங்களாக விற்பனையில் முன்னிலையில் நிற்கிறது. நியூயோக் ரைம்ஸ் பத்திரிகைச் சங்க அறிக்கையின்படி இப் புத்தகத்தின் ஆங்கிலமொழி பெயர்ப்பு வெளியான பின்னர் அதிகம் விற்பனையாகும். முதல் 10 புத்தகங்களில் பாப்பரசரின் நசரேத்தூர் இயேசு எனும் புத்தகம் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிறந்தார் எம் பாலகன் இயேசு

புதுமாதமாய் மலர்ந்ததே மார்கழி
புது மலராய் மலர்ந்தாரே - எம்
பாலகன் இயேசு
புது மணம் பரப்பினாரே - எம்
பாலகன் இயேசு
ஏழை எம் பாவங்களை போக்க
வந்துதித்தாரே - எம் பாலகன் இயேசு
எம்மை நல்வழிப்படுத்த!
வந்துதித்தாரே - எம் பாலகன் இயேசு
அனைவரும் ஒன்றிணைவோம்
பாலனை வணங்க!
விதைத்திடுவோம் அவர் பதம் நாடி
வேண்டிடுவோம் அவர் எம்
உள்ளங்களில் பிறந்திட!
பகிர்ந்து கொள்வோம் பாலகனின்
அன்பையும், மகிழ்ச்சியையும்
தெரிவிப்போம் எம் வாழ்த்துக்களை
போற்றிடுவோம், வணங்கிடுவோம்
எம் பாலகன் இயேசுவை!

**ஜேசுதாசன் மெடோனா,**
**திருச்சிலுவை கன்னியர் மடம்**
**மாத்தளை.**





## அழகு

கடலே உன் நீலம் அழகு
நதியே உன் வேகம் அழகு
காற்றே உன் ஓசை அழகு
மலரே உன் வண்ணம் அழகு
நீரே உன் குணம் அழகு
மண்ணே உன் படைப்பு அழகு
உயிரே நீ உதித்தது அழகு
மனிதர் உன் ஆன்மா அழகு
மொத்தத்தில் இறைவா நீ அழகு

சி. நெவில்

"கடவுளுக்காக நாம் மேற்கொள்ளும் போர்களத்தில் உலகம் அறியாத அமைதியை சுவைக்கின்றோம்"

# இளையோர் பாதை

அன்புள்ள நண்பா!

சின்னஞ் சிறுவர்களை என்னிடம் வரவிடுங்கள் என்று சொன்ன யேசு பாலன் பிறப்பை கொண டாடி மகிழும் நன்நாளிலே உன் னோடு தொடர்புகொள்கிறேன். இன்று எம்மை போல பல சிறுவர் இந்தக் கொண்டாட்டத்தை மகிழ்ந்து நினைவு கூற முடியாத துயரச் சூழலில் அகதிமுகாமிலும். மருத்துவ நிலையத்திலும் சொந்த வீடுகளில் இருக்க முடியாமல் அந்தரிப்பதை நீ அறிந்திருப்பாய் என நினைக்கின் றேன்.

அன்று யேசுவும் சொந்த மண் ணிலே அகதியாக இவ்விடம் இன்றி 'சத்திரத்தில் கூட இடம் இல்லை' என்று அல்லல்பட்டு மாட்டுத் தொழுவத்தில் பிறந் ததை இன்று எம்நாட்டில் எம்மை போன்ற சிறுவர்கள் சமாதானம் இன்றி அல்லல்பட்டு வாழ்வதை கண்டும் காணா மலும் கொண்டாடி மகிழ்வதில் கிறிஸ்து பிறப்பு அர்த்தம் பெறுமா? இவர்களை நாம் மூவிராசாக்கள் போல் பரிசுகள் கொண்டு சந்திக்க அன்பு. ஆதரவு. பிறசினேகம் என்ற சமாதான பரிசுகளால் அவர்களை மகிழ்விப்போமா இதையும் உன் நண்பர் களும் இணைந்து அவர்க ளுக்காக செபித்து அவர்களுக்கு ஆறு தல் கூறி கிறிஸ்து பிறப்பை அவர்களில் காண்போமா. 'சின்னஞ் சிறுவருக்கு நீங்கள் செய்தது அதை எனக்கே செய் தீர்கள்' என்று யேசு எமக்கு கற்பித்ததை நாமும் எம் செயலில் அன்பு பரிசை சமாதான பரிசை கொடுத்து வாழ சொல்லால் அல்ல செயலால் செய்வதில் நீ முன் வருவாய் என எதிர்பாத்தி ருக்கிறேன். உன் பதிலை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறேன்.

'சின்ன யேசுவின் நத்தார்'
'புது வருட வாழ்த்துக்கள்'

இப்படிக்கு
அன்பு நண்பன்
அ. ம. நோபேட்

## பிரியாவிடையும் ஒளிவிழாவும் ~ 2007

புனித பத்திரிசிரியார் அப்போஸ்தலிக்க நிறுவனத்தின் இவ்வருடம் ஒளிவிழா கடந்த 7ஆம் திகதி கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் மாலை 4.00 மணி அளவில் புனித பத்திரிசிரியார் ஆலயத்தில் திவ்ய நற்கருணை ஆராதனையும் அதனை தொடர்ந்து மாலை 5.30 மணிக்கு நன்றி திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. இந்நிகழ்ச் சியின் போது அருட் தந்தை லெநாட் அடிகளால் சிறப்பு அதிதியாக வருகை தந்து சிறப்பாக நத்தார் நற்சிந்தனை வழங்கினார். அதில் இன்றைய சூழ் நிலைக்கேற்ப கிறீஸ்த்துவின் பிறப்பை நினைவு கூர்ந்து இல்லாதவர்களோடு எமக்கு உள்ளதை பகிர்ந்து வாழ முன்வர வேண்டும்.

இவ் இல்ல மாணவர்கள் பெற்றுக்கொண்ட அனைத் துவித பயிற்சியையும், அனுபவத்தையும் சிறப்பாக கல்வி அறிவையும் கொண்டு வாழ்க்கையில் முன் னேற்றம் காண வேண்டுமென்றும் ஆசீர் வழங் கினார். அதே போல் இயேசுவின் இரண்டாவது வருகைக்கு நாம் எப்போதும் ஆயத்தமாய் இருக்க வேண்டுமென்று நற்செய்தி (மத்தேயு 24:37-44) ஐ மேல் காட்டி அனைவருக்கும் தனது நத்தார் வாழ்த்தை தெரிவித்துக் கொண்டார்.

மாணவர்களின் நத்தார் கலை நிகழ்ச்சியை தொடர்ந்து நிறுவன இயக்குனர் அருட். சகோ. எஸ். தொபியாஸ் அவர்களின் நத்தார் நற்சிந்தனை வழங்கினார்.


கடந்த ஆண்டு அனுபவத்தினூடாக ஒளிவிழாவிற்கு மரியன்னையின் சிறப்பு பங்களிப்பை நினைவுபடுத்தி நாமும் மரியன்னையின் வழியில் இயேசு பாலனை தரிசிக்க செபமாலை முக்கியத்துவத்தை திருதந்தை 16ம் ஆசீர்வாதப்பர் வேண்டிக்கொண்டதற்கிணங்க எமது குடும்பங்களிலும், நாட்டிலும் சமாதானம் நிலவ வேண்டி மன்றாடும்படி தனது உரையில் கூறியதோடு தனது நத்தார் வாழ்த்தையும் தெரிவித்துக்கொண்டார்.

இறுதியில் இராவுணவு வழங்கப்பட்டதோடு நத்தார் பரிசுகளும் வழங்கப்பட்டன.

தகவல்:
F. ரொற்றிகோ
புனித பத்திரிசிரியார் அப்போஸ்தலிக்க நிறுவன மாணவன்
தலவாக்கலை



## மூன்று வகை நண்பர்கள்



★ தினமும் தண்ணீர் விட்டால் தான் வளரும் வாழை மரம்போல், தினமும் உதவி செய்தால் தான் நம்மை அன்போடு கவனிக்கும் நண்பர்கள் ஒருவகை.

★ தானாக முளைத்துத் தானாகத் தண்ணீர் குடித்து தானாக வரும் பனை மரத்தைப் போல் எமக்கு வலிய வந்து உதவும் நண்பர்கள் வேறொரு வகை.

★ தினமும் நீரூற்றாது எப்போதாவது நீர் ஊற்றி விட்டால் போதும், வளர்ந்துவிடும் தென்னை மரத்தைப் போல் எப்போதாவது உதவி செய்தால் அதை நினைவில் வைத்துக் கொண்டு நமக்கு அடிக்கடி உதவும் நண்பர்கள் இன்னொரு வகை.

தொகுப்பு:
அருட். சகோ. தொபியாஸ்

## நம் நாடு இலங்கை



இலங்கை நாடு எம் நாடு
இலங்கை நாடு நம் நாடு
இலங்கை உன்னை வா
என்று அழைக்கின்றதடா தமிழா
உன் தேசம் வளரட்டும் உன்னாலே

சமாதானம் ஒளிரட்டும்

உன் அன்பு தாயாம் இலங்கை - நீ பிறந்த உடனே
உன்னை ஒரு இலங்கை குடிமகனாய் ஏற்றுக் கொள்கின்றது அல்லவா
உனது தாய் உன்னை பத்துமாதம் வயிற்றில் சுமந்து பெற்றாள்
ஆனால் உன்நாடு நீ பிறந்து இறக்கும் வரை சுமக்கின்றது

சமாதானம் வளரட்டும்

தாய் நாடாம் இலங்கை சமாதானம் இன்றி
பலரால் அழிகின்றது நீர் இன்றுமுதல்
புறப்பட்டு உன் தேசத்தின் மண்ணை செழிப்பாக்குவதற்கு
உன்னை கூக்குரலிட்டு அழைக்கின்றது

சமாதானம் மகிழட்டும்

நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட இந்த
அழகிய நாட்டை நாம் சிங்களவர், தமிழர்,
கிறிஸ்தவர், இஸ்லாமியர், இந்துக்கள் ஆகிய
நால்வரும் ஒன்றிணைந்து எமது தேசம் அதாவது
எம் இலங்கை நாட்டை கட்டியெழுப்புவோம்
கட்டியெழுப்புவோம்........ கட்டியெழுப்புவோம்.

சமாதானம் பெருகட்டும்

சமாதானம் நிலைக்கட்டும்

எஸ். கோல்டன்
தலவாக்களை







## உண்மைப்பணியில் ஊடகங்கள் என்னும் தலைப்பில் உலக தொடர்பாடல் தினம்

2008 ஆண்டுக்கான உலக தொடர்பாடல் தினம் உண்மைப்பணியில் ஊடகங்கள் என்னும் தலைப்பில் கொண்டாடப்பட உள்ளதாக திருத் தந்தை 16ம் பெனடிக்ற் பாப்பரசர் அண்மையில் தெரிவித்தார். உண்மைகளை தேடி அதனை மற்றவர்களுடன் பகிரும் பணியை ஊடகங்கள் என்றும் செய்யவேண்டும். இன்றைய ஊடங்கள் இந்த மையக்கருத்தை நன்கு புரிந்து கொண்டு அதன்படி தமது பணிகளை மக்கள் மத்தியில் ஆற்றவேண்டும். ஆபத்துக்கள் அதிகரித்து வரும் இக்காலகட்டத்தில் உண்மையை தேடுவது மிகவும் சவால் நிறைந்தது. அத்துடன் அதனை தமக்குள் வைத்திருப்பது உண்மையான பணி என்று கூற முடியாது. உண்மையை தேடி அதை பகிர்வது ஊடகங்களின் முக்கிய பணியாகும். உலக தொடர் பாடல் தினம் முதலில் 2ஆம் வத்திக்கான் சங்கத்தில் முன்மொழியப்பட்டு உலகில் கொண்டாடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## கிறிஸ்தவரின் அன்றாட வாழ்க்கை

பரிசுத்த ஆவியின் துணை கொண்டு கிறிஸ் துவை பின்பற்றுவதே கிறிஸ்தவ வாழ்வாகும் விசுவாச, நம்பிக்கை, அன்பு ஆகிய புண்ணியங் களை எவ்வாறு கடைபிடித்து வாழ்வது என் பதை இயேசு தம் வாழ்க்கையாலும். போதனை களாலும் காட்டியிருக்கிறார்.

**விசுவாசம்** என்பது தம்மை நமக்கு வெளிப் படுத்திய கடவுளின் வார்த்தையை ஏற்று நம்மை யே அவருக்கு கையளித்தலாகும்.

**நம்பிக்கையானது** நல்லவரும் வல்லவருமான கடவுளுக்கு நாம் பணிந்து வாழ்ந்தால் அவர் நம்மை கைவிடாமல் பாதுகாத்து நடாத்தி தேவையான வரங்களைத் தந்து நம் வாழ்க்கையின் இறுதியில் அவரோடு எம்மை சேர்ப்பார் என்ற மனவுறுதியாகும்.

அனைத்திற்கும் மேலாக கடவுளுக்கு **அன்பு** செய்யவும், தன்னைப் போல் பிறருக்கு அன்பு செய்ய வும், கடவுள் நமக்கு அளிக்கும் உன்னதமான மன நிலையே அன்பாகும். ஆகவே இவற்றை மனதில் நிறுத்தி; கிறிஸ்துவைக் கண்முன் கொண்டு அவரிடம் விளங்கிய அன்பு, உண்மை, நீதி, கடமையுணர்வு, கற்பு முதலிய புண்ணியங்களை எமது வாழ்விலும் கடைப்பிடித்து உண்மையான கிறிஸ்தவர்களாக வாழ முயல்வோம், வாழ்வோம என்ற நம்பிக்கை கொள் வோம்.

கிளனனோர்,
S. திலிஷா

## நண்பனுக்கு ஓர் மடல்!

அன்பு நண்பா!

புதிய ஆண்டில் உங்களோடு தொடர்பு கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

நாட்டுச் சூழ்நிலைகள், எதிர் கொண்ட பல்வேறு பிரச்சினைகள், உடல் நல தாக்கம் என பல்வேறுபட்ட துன்பங்கள் வாட்டினாலும். இவைகளினால் தான் நான் தொடர்பு கொள்ள முடியவில்லை என்று முடிவாக சொல்ல இயலவில்லை. இன்று எமது தொடர்பாடல் இடைவெளிக்கு ஏதோ சாட்டுக்கள் சொல்லி உண்மைகளை மறைத்து விடுகிறோம். இதனால் பல உண்மைகள் ஊமைகளாகி விடுகின்றன. எது உண்மை எது பொய் என்பதைக்கூட அறிய முடியாத அளவு மாறியிருப்பதை தினமும் தரிசிப்பீர் என எண்ணுகிறேன்.

உண்மையின் உயிர்ப்பிறப்பின் திருநாளில் புதிய உறவுகளைத் தேடி இம்மடலை வரைகின்றேன். உன் மனதில் எழும் எண்ணத்தை பதிலாக எழுது, புதிய ஆண்டுடன் எமது நட்பை தொடர்வோம்.

இன்று எதுவும் முடிவுக்கு வரும் என்று மனித அறிவுக்கு ஏற்றுக்கொள்ளமுடியாத ஒரு காலகட்டத்தில் வாழ்ந்தே ஆக வேண்டி உள்ளது. அச்சம், அவலம், அவநம்பிக்கை எல்லாமே சூழ்ந்திருக்கிறது. ஆனால் இன்றோ நாளையோ அல்லது என்றோ எல்லாம் நன்மையாகவே முடியும். முதலில் நம்பிக்கையை வளர்க்க வேண்டும். ஏனென்றால் இறைவன் நல்லவர் ~ இயற்கை நல்லது. இன்று எமக்கு புரியாதவைகள் நாளை அல்லது நாளைய சந்ததிக்கு புரியவரும்.

இந்த நம்பிக்கையே இன்று நமக்கு வலுச்சேர்க்கிறது. நம்பிக்கையோடு நடந்து செல்வோம். எமது தொடர்புகள் தொடர உமது புதில்களை எதிர்பார்க்கின்றேன். எமது பணிகள் அவ்வப்போது இடர்களால் தடைப்பட்டாலும் தொடர்வோம். ஒரு வழி அடைபட்டால் பல வழிகள் திறக்கும் என்பார்கள். திறக்கிறது இயற்கையை நேசித்து இறை உறவில் நம்பிக்கை வைத்து செயல்படுவோம். புதிய ஆண்டில் கைகோர்த்து நட்புடன் நம்பிக்கையூட்டும் பாதையில் நடப்போம்.

புத்தாண்டு வாழ்த்துக்கள்

அன்பு நிறை சகோதரன்
M. வேந்தன்.


## கிறிஸ்துமஸ் துணுக்குகள்

கிறிஸ்துமஸ் என்பதை X Mas என்று சுருக்கமாக ஏன் எழுதுகிறார்கள்? கிறிஸ்து என்கிற வார்த்தைக்கு ஈடான கிரேக்க வார்த்தை கிறிஸ்டோஸ் ஆகும். இந்த கிரேக்க வார்த்தையின் முதல் எழுத்து X என்னும் ஆங்கில எழுத்துக்கு ஈடானது. எனவேதான் கிறிஸ்மஸ் என்பதை சுருக்கி X Mas என்று எழுதுகிறார்கள்.

## கிறிஸ்துமஸ் மரம்



பண்டைய உரோமையர்கள் தங்களது குளிர்காலக் கொண்டாட்டங்களின் போது வேளாண்மைக் கடவுளான கார்டனுசை நினைவுகூர பச்சை மரத்தைப் பயன்படுத்தினர். இதுவே பின்னாளில் கிறிஸ்துமஸ் மரமானது. இம்மரத்தை கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்களின் போது முதன் முதலில் பயன்படுத்தியவர் மார்ட்டின் லூத்தர் என்று சிலர் கூறுகின்றனர். எனினும் 15ஆம் நூற்றாண்டிலிருந்துதான் இம்மரம் வைக்கும் வழக்கம் வந்தது என்பதைப் பலரும் ஒத்துக் கொள்கின்றனர்.



## கிறிஸ்துமஸ் மணி

கிறிஸ்துமஸ் மணிகள் மேலை நாடுகளில் பிரபலம். மேலை நாடுகளில் குளிர்காலத்தில் தீய சக்திகள் இரவில் மக்களைப் பயமுறுத்துகின்றன என்ற ஒரு மூடநம்பிக்கை இருந்து வந்தது. இப்படிப்பட்ட தீய சக்திகளை விரட்ட உலோகத்தினாலான சப்தம் எழுப்பினர். கிறிஸ்துமஸ் வழக்கத்தில் எழுந்த மணியோசை இதற்கொரு நல்ல தீர்வாக அமைந்தது. ஜோர்ஜியோ ரோட்ரிகுஸ் என்பவர் ஜிங்கில் பெல்ஜஸ் என்ற கிறிஸ்துமஸ் பாடலை இயக்கினார்.